# சந்நிதியான் அற்புதங்கள்

## பாகம் பத்து



ந.அரியரத்தினம்

2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

## அற்புதங்கள்

பாகம் பத்து

ந. அரியரத்தினம்

2022

தொண்டைமானாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : சந்நிதியான்
விடயம் : அற்புதங்கள் - பாகம் பத்து
ஆசிரியர் : ந. அரியரத்தினம்
பதிப்புரிமை : ஆசிரியருக்கு
வெளியீடு : பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு.
பிரதிகள் : 500
முதற் பதிப்பு : 2022.09.09
பக்கங்கள் : 68 + x
அச்சுப்பதிப்பு : தமிழ்ப்பூங்கா, நெல்லியடி, இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| உள்ளே | பக்கம் |
|---|---|
| ஆசியுரை | |
| வாழ்த்துரை | |
| முன்னுரை | |
| சந்நிதியான் - 01 | 1 - 7 |
| சந்நிதியான் - 02 | 8 - 13 |
| சந்நிதியான் - 03 | 14 - 20 |
| சந்நிதியான் - 04 | 21 - 25 |
| சந்நிதியான் - 05 | 26 - 30 |
| சந்நிதியான் - 06 | 31 - 36 |
| சந்நிதியான் - 07 | 37 - 42 |
| சந்நிதியான் - 08 | 43 - 49 |
| சந்நிதியான் - 09 | 50 - 56 |
| சந்நிதியான் - 10 | 57 - 64 |
| சந்நிதியான் - 11 | 65 - 68 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



எந்நிதியும் தருவான் செல்வச் சந்நிதியான் என்பது சைவ மக்கள் அனைவரினதும் அசையாத நம்பிக்கை யாகும். தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் வேல் வடிவில் அமர்ந்திருந்து அருள்பாலித்துக் கொண் டிருக்கும் அன்னதானக் கந்தனின் மெய்யடியவர்களில் ஒருவராக இருந்து சமூகத்திற்கு தன்னாலான சேவைகளை வழங்கிவருபவர் திரு. ந. அரியரட்ணம் அவர்கள். இவர் சந்நிதிக் கந்தனின் அற்புதங்களை வெளிக்கொணரும் வகையில் சந்நிதியான் அற்புதங்கள் என்ற தலைப்பிலே தொடர்ந்து எழுதி நூல்களை வெளியிட்டு வருவது அவரது ஆன்மிகப் பணிக்கு ஓர் காத்திரமான எடுத்துக்காட்டாகும்.

சந்நிதியான் அற்புதங்கள் எனப்படும் இந்நூலை பல பாகங்களாக வெளியிட்டு வருகின்றார். இன்று சந்நிதியான் அற்புதங்கள் பாகம் பத்து வெளியிடப்படுவது எமக்கு மிகவும் மன நிறைவைத் தருகின்றது. திரு. ந. அரியரட்ணம் அவர்கள் தனது அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர். தற்பொழுது கனடாவில் வசித்து வந்தாலும் தனது சமூகப் பணிகளில் இருந்து ஓய்வு பெறவில்லை. இவர் ஆன்மிக நூல்களை மட்டுமன்றி வரலாற்று ஆவணப் பதிவுகளையும் வெளியிட்டு வருகின்றார்.

இந்த வருடம் சந்நிதியான் அற்புதங்கள் பாகம் பத்தை வெளியிடுவதற்கு முருகப் பெருமானின் அருட்கடாட்சம் அவருக்கு கைகூடியுள்ளது. நாட்டு மக்கள் இன்று பல்வேறு துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து வருகின்ற போதிலும் அவற்றிலிருந்து அனைவரும் விடுதலை பெற்று மன மகிழ்வோடு வாழ்வதற்கு சந்நிதிக் கந்தனின் கருணை மழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஈழத்தின் வடபால் அமைந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் செல்வச்சந்நிதி முருகப்பெருமானின் அற்புதங்களைத் தாங்கி வெளிவருகின்ற இச் சிறப்பு இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்கும் பாக்கியம் பெற்றமையையிட்டு அகமகிழ்கின்றேன். இலங்கையைப் பொறுத்தவரையில் முருக வழிபாடு என்பது தனித்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக செல்வச்சந்நிதி ஆலய முறைமையும் அதன் மகத்துவமும் தனிப்பெரும் தன்மை வாய்ந்தது என்றால் மிகையாகாது.

நீண்ட வரலாற்றுப் பின்னணியை தன்னகத்தே கொண்டு அமைந்துள்ள இவ் ஆலயம் பிரதேச மக்களின் வாழ்வியலுடன் பிரிக்கமுடியாத தொடர்பினைக் கொண்டுள்ளது. பூசை முறைமைகள் முதல் பல்வேறுபட்ட மரபுரிமை தன்மைகளையும் கொண்டு அமைந்து காணப்படுகின்றமை சிறப்பு மிக்கதாகும்.

அன்னதானக் கந்தனாக வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் செல்வச்சந்நிதி முருகப்பெருமானின் தனித்துவத்தினையும் "அவனருளால் அவன் தாள் வணங்கி" என்பதற்கு இணங்க முருகப்பெருமானின் அற்புதங்களினைத் தொகுத்து இச் சிற்றிதழ் வெளிவருவது என்பது இன்றைய காலத்தில் இளம் தலைமுறையினருக்கு ஆன்மிக நாட்டத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயப்பாடு இல்லை.

நூலாசிரியர் திரு. நடராசா அரியரட்ணம் அவர்கள் தனது சேவைக்காலத்தில் ஆசிரியராகவும் அதிபராகவும் கோட்டக் கல்வி அதிகாரியாகவும் சமூகத்தினை வழிநடாத்தியதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது சமூகப்பணியாக வெளிவரும் இவ்வெளியீடு சிறக்க முருகப்பெருமானை வேண்டி நிற்பதுடன் இத்தகைய சிறப்பிதழ் தொடர்ச்சியாக வெளிவந்து அளப்பரிய ஆன்மிகப் பணியாற்ற வேண்டும் என முருகப்பெருமானின் பாதங்களை பணிந்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

**ஆழ்வாப்பிள்ளை** *சிறி (SLAS, MA & MPA)*
பிரதேச செயலாளர்.

ஆழ்வாப்பிள்ளை சிறி
பிரதேச செயலாளர்.
வடமராட்சி வடக்கு.
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சந்நிதியானுடைய பேரருளையும் பெரும் கருணையையும் பெறுகின்றவர்கள் அனைவரும் பெரும்பேறு பெற்றவர்கள். அடியேனது மூதாதையர்களும் அவ்வாறான பேறினைப் பெற்றவர்களாக மட்டுமன்றி சந்நிதியானுக்கு ஆலயத் திருப்பணி கள் செய்கின்ற பாக்கியத்தையும் பெற்றுள்ளனர். குறிப்பாக சந்நிதியானுடைய தீர்த்தக் கிணற்றினை அடியேனது பூட்டனார் ஆ. முருகுப்பிள்ளை தமது உபயமாக வழங்கி அதனை அந்தக் கிணற்றிலேயே ஆவணப்படுத்தியுமுள்ளார்.

இவ்வாறு எமது மூதாதையர்கள் சந்நிதியானுக்கு செய்து வருகின்ற தொண்டின் தொடர்ச்சியாகவே அடியேனும் எனது பணியை தொடர்ந்துகொண்டிருக்கின்றேன். இதேபோன்று சந்நிதியானுடைய திருவருளும் அவனது அடியவர்களது பேராதரவும் இல்லையானால் இந்தப் பணியை அடியேன் இம்மியளவும் முன்னகர்த்திச் செல்ல முடியாது என்பதையும் உணருகின்றேன். இவற்றையெல்லாம் சற்று ஆழமாகச் சிந்தித்தால் இங்கே நான் என்பதற்கே இடம் இல்லாமற் போகின்றது. நாம் எல்லோரும் சந்நிதியானது அடியவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான தொண்டுகளை மேற் கொண்டு வருகின்றோம். அவன் இயக்க நாம் எல்லோரும் இயங்குகின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆன்மிகப் பணி ஆரம்பித்த காலத்திலிருந்து அடியேன் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதை பலரும் அறிவார்கள். தற்பொழுது கனடாவில் வாழ்ந்து கொண்டிருப்பதால் நூல்கள் வாயிலாக அடியேனது பணி தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

சந்நிதியான் அற்புதங்கள் பாகம் பத்து என்ற இந்நூல் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் வெளியீடாக வெளிவரு வதனால் தனிச் சிறப்பினைப் பெற்றுள்ளது எனக் கூறலாம். அண்மையில் பிரதேச செயலரை அவரது அலுவலகத்தில் சந்தித்தபொழுது எவ்வித தயக்கமுமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்முகத்துடன் தனது ஒத்துழைப்பை வழங்கி அடியேனை உற்சாகப்படுத்தியதை இவ்விடத்தில் நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் வெளிப்படுத்துவது எனது கடமையாகும். இதேபோன்று கலாசார அதிகார சபையினரும் தமது சம்மதத்தைத் தெரிவித்ததுடன் எல்லா வகையான ஒத்துழைப்புகளையும் வழங்கியுள்ளனர். அவர்களது ஒத்துழைப்பும் பாராட்டுதல்களுக்குரியது.

இந்நூல் 2022 வருடாந்த உற்சவ காலத்தில் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வெளியீடு செய்யப்படுவது எல்லோருக்கும் நிறைவைத் தருகின்றது. இதற்கான அனுமதியையும் ஒத்துழைப்பையும் வழங்கிய வருடாந்த உற்சவ உரிமையாளர் சிவஸ்ரீ க. உலககுருநாத ஐயர் அவர்களுக்கும் உற்சவ கால பிரதம குருக்கள் உலககுருநாத ஐயர் ரமண ஐயர் ஆகியோருக்கும் உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் அறிமுக வெளியீடாக இந்நூல் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலும் வெளியிடப் பட உள்ளது. அவ் ஆலயத்தின் பிரதம குருக்கள் பொன். புவனேந்திரன் ஐயர் அவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

நூலை தட்டச்சுச் செய்தல், அதனை வடிவமைத்தல் உட்பட அனைத்து செயற்பாடுகளையும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு நூல் சிறப்பாக அமைவதற்கு உதவியவர் திருமதி க. மஞ்சுளா. தமிழ்ப்பூங்கா அச்சகத்தினர் வழமை போல தரமான பதிப்பாக இதனை உருவாக்கித் தந்துள்ளனர். இவர்களுக்கும் அடியேனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

சந்நிதியான் திருவருள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைப்பதாக. அவன் தாள் பற்றி அவனைப் போற்றி அவன் அருள் பெறுவோமாக.

நன்றி

*09.09.2022*
தொடர்புக்கு : *6479626417*

இறை தொண்டில்
**ந. அரியரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம் - 01

அன்று அந்த பையனின் தந்தையார் வீட்டில் இல்லை. தவிர்க்கமுடியாத ஒரு அலுவல் காரணமாக வெளியில் சென்று விட்டார். இதனால் அன்று வைரவசாமிக்கு பூசையினை நடாத்து கின்ற பொறுப்பு 16 வயதுச் சிறுவனாகிய இந்த பையனின் கடமை ஆகிவிடுகிறது. தந்தையார் பொன்னையா ஐயர் வீட்டில் இல்லாத சந்தர்ப்பங்கள் இதேபோல அரிதாகத்தான் ஏற்படும். இவ்வா றான சந்தர்ப்பங்களில் தந்தையார் பூசைச் செயற்பாடுகளை தனது மகனிடமே நம்பி ஒப்படைத்துவிடுவார். இது அந்த பையனுக்கு சிறு வயதிலேயே ஒரு தன்னம்பிக்கையை ஏற்படுத்தியது. அது மட்டுமன்றி தானே தனித்து பூசைச் செயற்பாடுகள் அனைத்தையும் செயற்படுத்தி முடிக்கும் ஆற்றலும் ஆளுமையும் தன்னிடம் இருப்பதையிட்டு அவனுக்கு அந்த வயதிலேயே ஒரு நிறைவும் இருக்கத்தான் செய்தது.

அந்த பையன் வேறு யாருமல்ல. கனடாவில் எல்லோரா லும் நன்கு அறியப்பட்ட சாமி அப்பாத்துரை தான். சாமி அப்பாத்துரையின் சொந்த இடம் சங்காணை. சங்காணையில் உள்ள அரசடி வைரவர் ஆலயம் இவர்களுக்கு சொந்தமான ஆலயம். இது சாமி அப்பாத்துரையின் பேரனால் ஸ்தாபிக்கப் பட்டது. இதனை பரம்பரை பரம்பரையாக இவர்களே நிர்வகித்தும் வருகின்றனர். அதேபோல இவர்களே பூசைச் செயற்பாடுகளை யும் மேற்கொண்டு வருகின்றனர். இங்கே ஒரு வழமை பின்பற்றப் பட்டு வருகிறது. நேர்த்தி வைத்து பூசையினை மேற்கொள்ள விரும்புகின்ற அடியவர்கள் அதற்குரிய பணத்தினை இவர்களிடம் வழங்கிவிடுவார்கள். இதன் பின்பு பூசை தொடர்பான பொருட் களையும் நைவேத்தியம் தொடர்பான பொருட்களையும் பூசை நடாத்துகின்ற இவர்களே கொள்வனவு செய்துகொள்வார்கள். இதேபோன்று நைவேத்தியம் முதலியவற்றையும் தாமே தயார் செய்து கொள்வார்கள். அடியவர்கள் நைவேத்தியம் படைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்திச் செயற்பாடு நிறைவேற்றுவதென்பது இந்த ஆலயத்தில் காலம் காலமாக இவ்வாறுதான் பின்பற்றப்பட்டு வருகிறது.

அந்தப் பகுதி மக்கள் காவற் கடவுளாக மட்டுமன்றி தமது குலதெய்வமாகவும் சங்காணை அரசடி வைரவர் கடவுளை வழிபட்டு வருகின்றனர். இது ஒல்லாந்தர் காலத்து வரலாற்றுச் சிறப்புமிக்க கீர்த்தி நிறைந்த ஆலயமாகவும் இருந்துள்ளது. இதேபோல வைரவக்கடவுள் தமக்கு நிறைவான திருவருளை வழங்கிவருகின்றார் என்பதிலும் இன்றும் மக்கள் அசையாத நம்பிக்கை உள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றனர். வைரவசாமி யில் இவ்வாறான நம்பிக்கையுள்ள நடுத்தர வயதுடைய பெண் ஒருவர் தான் அன்று வைரவருக்கு நேர்த்தி பூசை ஒன்றை மேற்கொள்ள விரும்புகின்றார். ஒரு சந்தர்ப்பத்தில் இந்த அம்மையாரின் கணவனுக்கு இருந்த தீராத நோய் இந்த வைரவர் ஆலயத்தில்தான் குணமடைந்த அதிசயமும் இடம்பெற்றது. இவ்வாறான பின்னணியுள்ள இவர்கள் படிப்பறிவற்ற பாமர குடும்பத்தவர்களாவர். தற்பொழுது அந்த அம்மையார் வைரவருக்கு சர்க்கரை அமுது படைத்து பூசை நடாத்துவதற்கு விரும்புகின்றார். இதனால் அதற்குரிய செலவுப் பணத்தையும் முதல்நாளே ஆலய உரிமையாளர்களிடம் கையளித்துவிடு கின்றார்.

அன்று தந்தையார் பொன்னையா ஐயர் இல்லாத காரணத் தினால் சிறுவனாகிய சாமி அப்பாத்துரைதான் பூசைச் செயற் பாடுகளை மேற்கொள்ளவுள்ளார். இதனால் சிறுவனாகிய சாமி அப்பாத்துரை வழமைபோல காலையில் எல்லா ஆயத்தங் களுடனும் ஆலயத்திற்கு வந்துவிடுகிறார். அவர் ஆலயத்தில் முன் ஆயத்தங்களை செய்துகொண்டிருக்கும் தருணத்தில் பூசைக்குரிய அந்த அம்மையாரும் அங்கே வருகின்றார். இருவரும் உரையாடுகின்றனர். சிறுவனான சாமி அப்பாத்துரை தான் நைவேத்தியம் முதலியவற்றை மடைப்பள்ளியில் தயார் செய்து ஒரு மணிக்கு முன்பு பூசைக்கு ஆயத்தமாகிவிடுவேன் என்பதை எடுத்துக்கூறுகின்றார். அதேபோல அந்த அம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் தானும் வீட்டிற்கு சென்று நீராடி ஆசாரசீலராக அர்ச்சனைக்குரிய பழம் பாக்கு முதலிய திரவியங்களையும் வாங்கிக்கொண்டு உரிய நேரத்திற்கு வந்துவிடுவதாகக் கூறிச் செல்கின்றார்.

சாமி அப்பாத்துரை நைவேத்தியத்திற்குரிய சர்க்கரை அமுதினை தயார்செய்து முடிக்கின்றார். இதேபோன்று மூலவருக்கு அபிஷேகம் செய்து பூசை நடாத்துவதற்குரிய எல்லா முன் ஆயத்தங்களையும் நிறைவாக செய்து முடித்து விடுகின்றார். தற்பொழுது உபயகாரரான அந்த அம்மையாரை எதிர்பார்த்து சாமி அப்பாத்துரை ஆலயத்தில் காத்திருக்கிறார். நேரம் ஒரு மணியை தாண்டி இரண்டு மணியாகிறது. தற்பொழுது மூன்று மணியும் ஆகிவிட்டது. அந்த அம்மையார் சமுகமளிக்க வில்லை. என்ன செய்வதென்று சிறுவனான சாமி அப்பாத்துரை க்கு விளங்கவில்லை. நேரமோ நான்கு மணியை அண்மித்துக் கொண்டிருக்கிறது. சாமி அப்பாத்துரை குழப்பத்திற்கு உள்ளா கின்றார். உபயகார அம்மையார் வந்தபாடில்லை. வைரவப் பெருமானுடைய பூசையைக் காண்பதற்கு அயலில் உள்ள சிலர் ஏற்கனவே வந்து காத்திருக்கின்றனர்.

அன்று சைவ மக்களுக்கு ஒரு விசேட நாளாகும். இதனால் சந்நிதியில் பூசையை முடித்துக் கொண்டு சில அடியவர்கள் இங்கே வைரவசாமியை வணங்குவதற்கும் வந்துள்ளனர். இதனால் பூசையினை நடாத்துகின்ற சாமி அப்பாத்துரை மட்டு மல்ல பூசையினை காண்பதற்காக வந்திருந்த அடியவர்களும் சேர்ந்து அந்த அம்மையாருக்காக காத்திருக்கின்றனர். சாமி அப்பாத்துரை அங்கே காத்திருக்கும் அடியவர்களுக்கு விடயத்தை தெளிவுபடுத்துகின்றார். உபயகாரர் நேர்த்தியை நிறைவு செய்கின்ற உபயகாரராக இருக்கின்றார். இதனால் அவர் வந்தபின்புதான் பூசையினை ஆரம்பிப்பது பொருத்தமானதென அங்கே கூடியிருந்த அடியவர்களுக்கு எடுத்துக் கூறுகின்றார். அத்துடன் அந்த அம்மையார் யார் என்ற விபரங்களையும் அவர்களுக்கு தெரிவிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விபரங்களை கேட்டுக்கொண்டிருந்த அடியவர்கள் சிலர் அங்கே ஒரு குண்டை தூக்கிப் போடுகின்றனர். இங்கே பூசைக்கு உபயம் கொடுத்த அந்த அம்மையாரை தாம் சந்நிதியில் சந்தித்த விபரங்களை சாமி அப்பாத்துரைக்கு எடுத்துக் கூறுகின்றனர். தாம் அவருடன் சந்நிதியில் உரையாடியது பற்றி கூறுகின்றனர். அந்த அம்மையார் ஈரமான உடுப்புடன் அங்கே சந்நிதி முருகனை மனம் உருகி வழிபட்டுக் கொண்டிருந்தது பற்றியும் விபரமாக எடுத்துக் கூறினார்கள். அந்த அம்மையாருடைய வரவுக்காகவே இங்கே காத்திருந்த சாமி அப்பாத்துரைக்கு இது விளங்கிக்கொள்ள முடியாத புதிராக மாறுகிறது. அவர் தன்னை சுதாகரித்துக் கொள்கின்றார். அத்துடன் நிதானம் தவறாதும் பார்த்துக் கொள்கின்றார். ஏதோ நடக்கிறது என்பதனை விளங்கிக் கொள்கின்றார். அதனால் அதன்பின்பும் அந்த அம்மையாரையே எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றார்.

நிறைவாக நான்கு மணியையும் தாண்டிய பின்பு ஒருவாறு அந்த அம்மையார் அங்கே வந்து சேர்கின்றார். உடனடியாகவே வைரவசாமிக்கு பூசை இடம்பெறுகிறது. எல்லாமே நிறைவாக நடந்தேறுகிறது. இப்பொழுது சாமி அப்பாத்துரை சற்று நிதானமாகச் சிந்திக்கின்றார். குளித்துவிட்டு இங்கே வைரவ சாமியினுடைய பூசைக்கு வருகின்றேன் என்று கூறிச் சென்றவர் குளித்த உடுப்புடன் சந்நிதியில் நின்று வழிபடுகின்றார். அதுவும் இங்கே மதியம் ஒரு மணியளவில் வருவதாகக் கூறிச் சென்றவர் சரியாக அதேநேரம் சந்நிதியில் நின்று வழிபடுகின்றார். இதனை சாமி அப்பாத்துரையால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. இது எவ்வாறு சாத்தியமாகும் என்ற குழப்பமும் சந்தேகமும் அவருடைய உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்தது.

பூசை நிறைவு பெற்று அடியார்களும் ஆலயத்தை விட்டு நகர்ந்து செல்ல ஆரம்பிக்கின்றனர். இப்பொழுது சாமி அப்பாத்துரை அந்த அம்மையார் தாமதமாக வந்த விடயம் பற்றி உரையாடுகின்றார். அதற்கு அந்த அம்மையார் இவ்வாறுதான் விளக்கம் அளிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான் சந்நிதி முருகனையும் உள்ளம் உருகி வழிபடு கின்ற நான்தான். இண்டைக்கும் சந்நிதிக்கு சென்று முருகனை கும்பிட வேண்டுமென்று ஒரு விருப்பம் மனதிற்குள் இருந்ததுதான். ஆனாலும் நான் நேர்த்திக் காரியத்தை இங்கேதான் வந்து நிறைவு செய்ய வேண்டியிருந்ததும் எனக்குத் தெரியும். அப்படியிருந்தும் நான் சந்நிதியானைக் கும்பிட்டு விட்டுத்தான் வருகிறேன். நான் பஸ் ஏறியோ அல்லது எந்த வாகனத்திலோ ஏறி சந்நிதிக்குப் போகவில்லை. சந்நிதியில் நின்று மனம் உருகி முருகனையும் கும்பிட்டது உண்மை தான் தம்பி. இது எப்படி என்று எனக்கும் சொல்ல தெரியவில்லை...**

படிப்பறிவு அற்ற, பாமர குடும்பத்தைச் சேர்ந்த அந்த அம்மையாரிடமிருந்து இவ்வாறான ஒரு விளக்கம்தான் அவருக்கு கிடைத்தது. சிறுவனாக இருந்த சாமி அப்பாத்துரை க்கு இது விளங்கிக்கொள்ள முடியாததாகவும், புதுமையான தாகவும் அமைந்திருந்தது. குளித்துவிட்டு பூசைக்கு வருகின் றேன் என்று கூறிச் சென்றவர் குளித்த உடுப்புடன் நின்று அதே நேரம் சந்நிதியில் நின்று வழிபடுவது எப்படி சாத்தியமாகும். மேலும் இயல்பாக நடைபெற்றுக் கொண்டிருப்பது போன்ற ஒரு சம்பவமாக அதனை அவரால் உள்வாங்கவும் முடியாதிருந்தது. ஆனாலும் அது உண்மையாக இடம்பெற்றுள்ளது என்பதனை உணரும்போது அதனை ஒதுக்கிவிடவும் அவரால் முடிய வில்லை.

அப்பொழுதுதான் ஆண்டவனுடைய சக்தி ஒன்று எப்பொழுதும் எம்மைச்சுற்றி செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை சாமி உணர ஆரம்பிக்கின்றார். இவ்வாறுதான் தனது 16 வயதளவில் சாமி அப்பாத்துரை ஆன்மிகம் தொடர்பான சிந்தனைக்குள் படிப்படியாக மூழ்க ஆரம்பிக்கின்றார். காலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கில் ஆன்மிக உண்மைகளையும் உணர்வுகளையும் தனது அன்றாட வாழ்வியல் ஊடாகவே பட்டறிவாகவே உணர்ந்து கொள்ளுகின்ற இன்றைய நிலைக்கும் அவர் பக்குவப்படுகின்றார்.

இன்று பல்துறை ஆற்றல் நிறைந்தவராக சாமி அப்பாத்துரை விளங்கிக் கொண்டிருக்கின்றார். முக்கியமாக அவர் எழுதிய நான்கு நூல்களை இன்று கனடா நாட்டவர் உட்பட 60 நாடுகளுக்கு மேற்பட்ட மக்கள் பல்வேறு நோக்கங்களுக்காக தினம் தினம் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அதனால் அவர் உலகம் அறிந்த சமுக அறிஞனாகவும் பார்க்கப்படு கின்றார். இவ்வாறு தமிழர்களுக்கு பெருமைபெற்றுத் தருகின்ற பல ஆற்றல்களும் ஆளுமைகளும் சாமி அவர்களுக்கு இருப்ப தனை நாம் அனைவரும் ஓரளவேனும் அறிந்தவர்களாக உள்ளோம். ஆனாலும் சாமி அப்பாத்துரையின் ஒட்டுமொத்த வாழ்வியலுக்கும் அவரது சிறப்பிற்கும் உயர்வுக்கும் அத்திவார மாக இருப்பது ஆன்மிகம் தான். இதனை அவர் தனது சிறு வயதிலிருந்தே நன்கு உணர ஆரம்பித்துவிட்டார். இதனை பல தடவைகள் அடியேனுடன் மனம்விட்டு பகிர்ந்துகொண்டிருக் கிறார்.

சாமி அப்பாத்துரை அவர்கள் இவ்வுலக வாழ்க்கை என்ற போர்வையை போர்த்தியிருக்கிறார். அதேநேரம் அவருக்குள் அபாரமான சில ஆன்மிக சக்திகள் இருப்பதனை பலர் நேரடியாகவும் நிதர்சனமாகவும் உள்வாங்கியுள்ளனர். அரை நூற்றாண்டிற்கு முன்பு சாமி அப்பாத்துரையின் ஆன்மிக பயணம் சங்காணை அரசடி வைரவர் ஆலயத்தில் ஆரம்பமாகியது. அங்கே சந்நிதியானால் அவர் ஆற்றுப்படுத்தப்பட்டார். அது இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அவரிடம் சில ஆன்மிக சக்திகள் வெளிப்படுகின்றன என்பதனை அவருடன் நெருக்கமாக பழகுகின்றவர்கள் அறிந்துகொள்கின்றனர்.

இது அவசர உலகம், பொருள் தேடும் உலகம்... என பல கோணங்களில் இன்றைய வாழ்வியல் நோக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆனால் இவ்வாறான சூழ்நிலைகளுக்குள்ளும் இவ்வாறான வாழ்வியலையும் ஊடறுத்து ஆன்மிகம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று இயற்கையும் அவ்வப்போது இறை சக்தி இருப்பதை மனிதனுக்கு உணரவைத்துக் கொண்டிருக்கிறது என்பதை பலர் தற்பொழுது தமக்கிடையே பேசிக் கொள்வதையும் நாம் காணமுடிகிறது.*

*ஓம் முருகா!*

## ஒரு குறையும் இல்லை

நடந்தால் விழுந்துவிடுவார் போல் காணப்படுவார். ஆனால் நாங்கள் யாரும் செய்யமுடியாத காரியத்தை செய்து கொண்டிருப்பவர் இந்தப் பெண்மணி. ஆலயத்தில் அபிஷேகங்கள், பூசைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பொழுது காண்டாமணியும் ஒலித்துக் கொண்டிருக்கும். அதனைச் செயற்படுத்துபவர் இவர்தான். சில சந்தர்ப்பங்களில் அது ஒரு சில மணித்தியாலங்கள் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருப்பதையும் நீங்கள் அவதானிக்கலாம். இவருடைய சொந்த இடம் பருத்தித்துறை. ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக இவ்வாறு காண்டாமணியை ஒலிக்கச் செய்து சந்நிதியானுடைய துணையுடன் சந்நிதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். வழமைபோல தற்பொழுதும் அவரைச் சந்தித்து உரையாட வாய்ப்புக் கிடைத்தது.

'எனக்கு எல்லாவற்றையும் முருகன் தருகின்றார். அது மட்டுமல்ல நான் கேட்கின்றவற்றையும் தவறாமல் அவர் செய்வார். எனக்கு ஒரு குறையும் இல்லை' என உண்மையை உண்மையாகக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புதம் - 02

*29.04.2022 வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் மதியநேரப் பூசைகள் விஷேட அபிஷேகச் செயற்பாடுகள், அன்னதானச் செயற்பாடுகளுடன் அனைத்தும் நிறைவாக நிறைவுபெற்றுவிட்டன. தற்பொழுது பி.பகல் 5.00 மணி ஆகிவிட்டது. சந்நிதியானது சாயரட்சப் பூசைக் கான நைவேத்தியமாக அவல் தயாராகிக் கொண்டிருக்கிறது. அப்பொழுது அங்கே ஆலய கருமபீடத்திற்கு ஒருவர் வருகின் றார். ஆலய தரிசனத்தை முடித்துவிட்டு வருகின்றார் என்பது அங்கே வெளிப்படுகிறது. அவ்வாறு வந்த அந்த அடியவர்* **மருந்து தாருங்கள்** *எனக் கேட்கின்றார். அதனை கவனமாக உள்வாங்கிய அடியேன் மருந்துடன் பலகாரங்களும் கொஞ்சம் தரவா என வினாவுகின்றேன். அதற்கு அவர்,* **அவருடையது ஏதாவது தாருங்கள். எதுவாக இருந்தாலும் பரவாயில்லை** *எனப் பதில் கூறுகின்றார். அவ்வாறே அடியேன் மருந்துடன் வடை, மோதகம் போன்ற பலகாரங்களையும் சேர்த்து அவருக்கு வழங்குகின்றேன். அவர் மடியிலிருந்து சிறிய பணத்தை எடுத்து எம்மிடம் வழங்குகின்றார்.*

*இது சாயரட்ச பூசைக்கு சற்று முந்திய நேரம். கருமபீடம் சற்று ஓய்வாக இருந்ததினால் நீங்கள் எந்த இடம் என அந்த அன்பரிடம் விசாரிக்கின்றேன். தெல்லிப்பளை என பதிலளிக் கின்றார். சந்நிதிக்கு நீங்கள் காலம் காலமாக வருகிறீர்களா எனக் கேட்டதற்கு தனது சிறு வயது தொடக்கம் தனது தந்தை யாரது காலத்திலிருந்து வருவதாகக் குறிப்பிடுகின்றார். மேலும் தனது பெற்றோர் திருமணம் செய்து மிக நீண்ட காலம் குழந்தை இல்லாது இருந்ததாகவும், சந்நிதியானது திருவருளினால்தான் தான் பிறந்தது பற்றியும் கூறுகின்றபொழுது அவரது கண்கள் கலங்குவதையும் அவதானிக்க முடிந்தது. அவருக்கு சற்று விலகி அங்கே ஒரு அம்மையார் நின்றிருந்தார். அது அவரது துணைவியாகத்தான் இருக்கவேண்டுமென ஊகிக்க முடிந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடமே அதனைக் கேட்டு அது அவரது மனைவிதான் என்பதையும் உறுதிப்படுத்த முடிந்தது.

அவர்களுடன் சற்று ஆழமாக உரையாட வேண்டுமென்ற உள்ளுணர்வு அடியேனுக்கு ஏற்பட்டது. அவ்வாறு உரையாடிய சந்தர்ப்பத்தில் தான் அந்த அன்பர் தனது ஆழ்மனது உணர்வு களை மனம்விட்டு அடியேனுடன் பகிர்ந்துகொண்டார். கொத்தடிமை என்ற சொல்லை நாம் கேள்விப்பட்டிருக்கின் றோம். சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் உள்ள குடும்பம் பரம்பரை பரம்பரையாக இன்னொருவருக்கு அடிமைப்பட்டு அடங்கி ஒடுங்கி வாழ்ந்து வருவது பற்றிய அதன் தார்ப்பரியங்கள் பற்றி அறிந்திருக்கின்றோம். இந்த அன்பரும் கொத்தடிமையாக வாழ்ந்து கொண்டிருப்பது தெரியவந்தது. அவ்வாறு கொத்தடிமையாக தாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த விடயத்தை அடக்க முடியாது வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் கண்ணீருடன் தான் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். அதுவும் தத்தித்தத்தி தான் தனது உணர்வுகளை அவரால் பகிர்ந்து கொள்ள முடிந்தது.

இந்த அன்பர் இங்கே வெளிப்படுத்தியது அரைகுறையான தொத்தடிமை அல்ல. அது முழுமையான கொத்தடிமைச் சூழ்நிலை என்பது மிகத் தெளிவாகவே விளங்கியது. அடியவர் கள் இப்பொழுது இதனை ஓரளவு ஊகித்திருப்பீர்கள் என நம்பு கின்றோம்.

இது சமுதாயத்தில் காலம் காலமாக நிலவிவருகின்ற ஆண்டான் அடிமை கொத்தடிமை அல்ல. ஆண்டவன் அடியவன் கொத்தடிமை. கொத்தடிமைப்பட்டிருக்கின்ற அடியவன் முழுமையாகத் தானே விரும்பி ஆண்டவனாகிய சந்நிதி முருகனுக்கு கொத்தடிமைப்பட்டிருக்கின்ற ஓர் சூழ்நிலை. அதேபோல அடியவனாகிய கொத்தடிமையைப் பாதுகாத்து அவனது துன்ப துயரங்களைப் போக்கி அவனுக்கு ஆபத்பாந்தவ னாக உதவிக்கரம் நீட்டுகின்ற சந்நிதி முருகனது கருணை என்ற அருள் நிறைந்த கொத்தடிமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு தனது தந்தையார், தற்பொழுது தாம், தமது பிள்ளைகள் என அனைவருமே சந்நிதியானது அடியவர்களாக வாழ்ந்து கொண்டிருப்பதை நாத்தழதழக்க எடுத்துக் கூறினார். இந்த மண்ணில் தாம் வாழ்ந்து கொண்டிருப்பதே சந்நிதியானது திருவருளினால் மட்டும்தான் என்பதை மனமுருகி வெளிப்படுத்தி னார். அருகில் நின்ற அவரது துணைவியாரும் கணவனைப் போலவே கண்கலங்கினார். அந்த சந்தர்ப்பத்தில் ஆலயத்தில் சாயரட்சப் பூசைக்கான மணியும் ஒலிக்க ஆரம்பித்தது. அடியேன் அவர்களது தொலைபேசி இலக்கத்தை பெற்றுக்கொண்டபின் மீண்டும் கருமபீடத்திற்கு சென்று அங்கே கருமங்களை தொடர ஆரம்பித்தேன்.

**01.05.2022** ஞாயிற்றுக்கிழமை காலை **8.00** மணியளவில் இந்த குடும்பத்தினருடன் தொலைபேசியினூடாகத் தொடர்பு கொள்ள முடிந்தது. அவ்வாறு தொடர்புகொண்டு உரையாடும் பொழுது இந்தக் குடும்பத்தினர் சந்நிதியானது கொத்தடிமை களாக வாழ்ந்து கொண்டிருப்பது தொடர்பான ஆழமான விபரங்களை அடியேனால் பெறமுடிந்தது. அவற்றையும் வாசகர் களாகிய அடியார்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம். காவடி, பறவைக் காவடி, ஆட்டக் காவடி என பலவகையான காவடிச் செயற்பாடுகளை தமது நேர்த்திக்காக மேற்கொண்டுவருகின்ற சந்நிதியானது மெய்யடியவர் செறிவாக வாழுகின்ற இடங்களில் ஒன்று தெல்லிப்பளைப் பகுதியாகும். தெல்லிப்பளை கிழக்கு வீதிப் பகுதியில்தான் இந்தக் குடும்பத்தினரின் குடியிருப்பும் அமைந்துள்ளது. இந்த அன்பருடைய பெயர் சிவசக்திவேல். தந்தையார் பெயர் ஐயம்பிள்ளை.

இவருடைய தந்தையார் ஐயம்பிள்ளை குழந்தைப் பாக்கியம் கிடைக்காததால் சந்நிதியானிடம் வந்து கண்ணீர் சிந்தி கையேந்தி வழிபாடு செய்து வந்துள்ளார். அவருடைய உருக்க மான வழிபாட்டினால் போலும் திருமணமாகி **13** வருடங்களின் பின்பு அவருக்கு குழந்தைப் பாக்கியத்தை சந்நிதியான் வழங்கி யுள்ளான். குழந்தைக்கு சிவசக்திவேல் எனப் பெயரிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ஆம் நாள் குழந்தைக்கு நகை போட்டு தொட்டிலில் போடும் நிகழ்வினை நடாத்தமுன்பு சந்நிதியானுக்கு தங்கத்தினால் வேல் செய்து கொடுத்து சந்நிதியானது நேர்த்தியையும் நிறைவு செய்துள்ளார்.

சிறு வயதிலிருந்தே தந்தையைப் போல சிவசக்திவேலும் சந்நிதியானிடம் வந்து வழிபட்டுச் செல்லுகின்ற அடியவராக வாழ்ந்துவந்துள்ளார். ஆனால் காலப்போக்கில் பல்கலைக்கழக படிப்பு, குடும்பம், தொழில் போன்ற செயற்பாடுகளில் சந்நிதி யானுடன் உள்ள உறவையும் தொடர்பையும் சற்று தளர்த்து கின்ற சூழ்நிலைக்கு தெரிந்தோ தெரியாமலோ ஆளாகி உள்ளார். ஆனால் இவர்கள் பரம்பரை பரம்பரையாக சந்நிதி யானது கொத்தடிமைகளாக வாழ்ந்து வருபவர்கள் அல்லவா? இதனால் சந்நிதியான் இவற்றை எல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பானா? வழமையான சோதனைகள், வேதனை களைக் கொடுத்து திருவிளையாடல்களை நடாத்தியுள்ளான். இதனால் இன்று நாளும்பொழுதும் சந்நிதியானை நினைத்து உள்ளம் உருகி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதேபோல தன்னைவிட்டு சற்றும் விலகிப்போக முடியாதபடி கருணை என்ற கயிற்றினால் சந்நிதியான் இவர்களைக் கட்டிப் போட்டு வைத் துள்ளதையும் காணமுடிகிறது. அதன் ஒரு அங்கமாகத்தான் அன்று வெள்ளிக்கிழமையும் ஆலயத்திற்கு வந்து சந்நிதியானை மனமுருகி வழிபாடு செய்ததுடன் அவருடைய மருந்தினையும் பெற்றுச் சென்றனர்.

சந்நிதியானது திருவருள் தொடர்பாக இவர்களுடைய குடும்பத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் ஏராளம். ஆனாலும் சந்நிதி யானது பெருங்கருணையை வாசகர்களாகிய அடியவர்களும் அறிந்துகொள்வதற்காக இரண்டு சம்பவங்களை மட்டும் இங்கே சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ளுகின்றோம். சிவசக்திவேல் சகுந்தலாதேவி தம்பதிகளின் இரண்டாவது குழந்தையின் பெயர் அன்பனன். இந்தக் குழந்தைக்கு ஒன்றரை வயது நடக்கும் பொழுது குழந்தை செப்ரிசிமியா நோயினால் மோசமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வைத்தியர்கள் எவ்வளவு முயன்றும் வருத்தத்தை குணமாக்க முடியவில்லை. வைத்தியர்கள் வெளிப்படையாகவே பிள்ளையை எங்களால் காப்பாற்ற இயலாது என கவலையுடன் தெரிவித்துள்ளனர். அத்துடன் இனிமேல் ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டுமெனவும் ஆறுதற்படுத்தியும் உள்ளனர். குழந்தை மூன்று நாட்கள் வைத்தியசாலையில் கோமா நிலையிலேயே மூச்சுப்பேச்சு எதுவும் இன்றி இருந்துள்ளது. சிவசக்திவேல் வீட்டில் கண்ணீரும் கம்பளையுமாக இருந்துள்ளார். எல்லாம் முடிந்துவிட்டதாக நினைத்து தாளாத துன்பத்துடன் காணப்பட்டுள்ளனர். இதனை அவதானித்த சிவசக்திவேலின் தந்தையார் ஐயம்பிள்ளை இங்கே இருந்து கண்ணீர் சிந்திப் பயன் இல்லை. சந்நிதியானிடம் சென்று கையேந்து என ஆற்றுப்படுத்தியுள்ளார்.

சிவசக்திவேல் நேராக சந்நிதிக்கு வந்துள்ளார். அது ஒரு சனிக்கிழமை பூசை நிறைவுபெற்றுவிட்ட நேரம். ஆலய உள் மண்டபத்தில் நின்று தனது குழந்தையை மீட்டுத் தருமாறு உள்ளத்தாலும் உடலாலும் அழுதவாறு வழிபட்ட வண்ணமிருந்துள்ளார். அப்பொழுது ஆலயக் குருக்கள் ஒருவர் மூலஸ்தானத்திலிருந்து வருகின்றார். வந்தவர் இவருக்கு சந்நிதியானது திருநீற்றினை தானாகவே வழங்கியுள்ளார்.

சிவசக்திவேல் அந்த திருநீற்றை அப்படியே யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றுள்ளார். அங்கே குழந்தையுடன் உடனிருந்த தனது மனைவியிடம் அந்த திருநீற்றை மிகக் கவனமாகக் கையளித்துள்ளார். பயபக்தியுடன் திருநீற்றைப் பெற்றுக்கொண்ட குழந்தையின் தாயார் சகுந்தலாதேவி குழந்தையின் நெற்றியில் அந்த திருநீற்றினை அணிந்துள்ளார். அவ்வாறு திருநீற்றினை குழந்தைக்கு பூசிவிட்ட தாயார் ஏதோ உள்ளத்தில் நினைத்தவராக தனது குழந்தையை அன்பு... அன்பு... என சில தடவைகள் அழைக்கின்றார். அப்பொழுது தான் அந்த அதிசயம் அற்புதம் அங்கே அரங்கேறுகிறது. வைத்தியர்கள் செய்யாவிட்டாலும் வைத்தியர்கள் கூறியது இடம் பெறுகிறது. மூன்று நாட்கள் கோமா நிலையில் இருந்த குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாகக் கண் திறக்கிறது. மெதுமெதுவாக அசைவுகளும் ஏற்படுகின்றன. அது மட்டுமல்ல படிப்படியாக ஆனால் குறுகிய காலத்திலேயே குழந்தை முழுமையாகக் குணமடைந்துவிட்டது. இன்று அன்பனன் யாழ் பல்கலைக்கழகத்தில் தனது பல்கலைக் கழக கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

2016ஆம் ஆண்டு சிவசக்திவேலுக்கு காட் அற்றாக் வந்துள்ளது. 2017ஆம் ஆண்டு அவரது உடலின் வலது பக்கத்தில் பாரிசவாத நோய் ஏற்பட்டுள்ளது. இதனால் அவரது வலதுபக்கம் முழுமையாகச் செயற்பட முடியாத நிலையையும் அடைந்துள்ளது. சிவசக்திவேல் தனது வாழ்வியல் நிறைவு பெற்றுவிட்டதை உணர ஆரம்பித்தார். வானமே இருண்டு விட்டது போல தனது முழு வாழ்க்கையும் இனிமேல் இருள் நிறைந்ததாக இருக்கப்போவதையும் சிந்திக்க ஆரம்பித்தார்.

ஆனாலும் தனக்கு வைத்தியம் செய்வதற்கு எல்லா வைத்தியரையும் விட பெரிய ஒரு வைத்தியர் இருப்பதை உணரு கின்றார். சந்நிதியானிடம் தன்னை முழுமையாக ஒப்புவிக் கின்றார். நாளும் பொழுதும் உள்ளம் உருகி கண்ணீர் சிந்தி சந்நிதியானை மன்றாடி வணங்குகின்றார். அதே மன்றாட்டத் துடன் தியானம், யோகா போன்ற செயற்பாடுகளையும் நம்பிக்கை யுடன் தொடர்ந்து மேற்கொள்ளளானார்.

வைத்தியருக்கு வைத்தியரான சந்நிதியானது திருவருளி னால் அவரது பாரிசவாத நோய் படிப்படியாகக் குறைவடைய ஆரம்பித்தது. இனிமேல் உனக்கு வீல்செயர் வாழ்க்கைதான் என வைத்தியர்கள் கூறிய கூற்றும் பொய்யாகிப் போனது. 2018ஆம் ஆண்டு மாசி மாதம் பாரிசவாத நோய் முழுமையாகக் குண மடைந்து சராசரி மனிதனாக வாழ ஆரம்பித்துவிட்டார். இன்று கட்டுவன்புலவன் மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியத் தொழிலை இயல்பாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். அடியேனும் அன்று ஆலயத்தில் அவரை இயல்பான ஒருவராகவே சந்தித்தேன்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புதம் - 03


*1983*ஆம் ஆண்டு இனக்கலவரத்தினால் எல்லா வகையிலும் எமது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். அது மட்டுமல்ல அவ்வாண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் காலபோக விவசாயமும் அழிவடைந்த காலகட்டம் அது. இதனால் ஜீவனோபாயத்திற்காக சில விவசாயிகள் *1984*ஆம் ஆண்டு முற்பகுதியில் நீர்ப்பாசனத்தை பயன்படுத்தி சிறு தானியங்கள், மரக்கறி செய்கை போன்ற சிறு விவசாயச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.


*1984*ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பு முடிவடைந்து சில நாட்கள் ஆகிவிட்டன. அன்றைய பொழுது மாலைப் பொழுதாகவும் ஆகிவிட்டது. காவி உடை அணிந்த சாமியார் ஒருவர் வீட்டிற்கு வருகின்றார். வந்தவர் இரகுநாதன்... இரகுநாதன்... என்று பெயர் சொல்லி அழைக்கின்றார். அப்பொழுது இரகுநாதனின் மகள் வசந்தாதேவி வீட்டு வாசல் கதவைத் திறந்து எட்டிப் பார்க்கின்றார். காவி உடை அணிந்த சாமியார் ஒருவர் வீட்டு வளவிற்குள் காணப்படுகின்றார். சாமியார் ஒருவர் தமது வீட்டிற்கு வந்திருப்பதைக் கண்ட வசந்தாதேவி அதனை ஒரு நல்ல சகுணமாக உணருகின்றார். பக்தி கலந்த ஒரு மகிழ்ச்சி அவரை அறியாமலே அவருக்குள் ஏற்படுகிறது. சாமியாரை நாடிச்சென்று மலர்ந்த முகத்துடன் வரவேற்கின்றார். வந்த சாமியாரும் சாந்தமாக அப்பா எங்கே என்று அவரிடம் வினாவுகின்றார். அதற்கு ரகுநாதன் மகள், அப்பா பின் தோட்டத்தில் தண்ணி மாறிக் கொண்டிருக்கிறார் என பதிலுரைக்கின்றார். அப்படிச் சொன்னவர் சாமியாரிடமிருந்து பதிலை எதிர்பார்க்காமலே இருங்கள் சாமியார் அப்பாவை நான் கூட்டிக்கொண்டு வாறேன் என சாமியாரிடம் மிகவும் அடக்கத்துடன் கூறுகின்றார்.

அதற்கு அந்த சாமியார் நீ அப்பாவிடம் சொல்லு **"நான் சந்நிதியில் அடியார் மடத்தில் இருந்து வந்தனான் என்றும்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அங்கே அடியார் மடத்திலுள்ள உங்கள் அப்பப்பா முருகேசு சாமியார் தான் வரச்சொல்லி சொல்லிவிட்டவர் என்றும்"** இதைச் சொல்லத்தான் இங்கே நான் வந்துள்ளேன் என்று தான் வந்ததற்குரிய காரணத்தை இரகுநாதனின் மகளிடம் சாமியார் வெளிப்படுத்தினார். வசந்தாதேவியிடம் அப்படிக் கூறிய அந்த சாமியார் சரி... உன்னிடம் ஒன்றும் இருக்காது... என்றும் கூறுகின்றார். சிறிது ஆறுதலாகவும் அடக்கமாகவும் இரந்து வாழ்கின்ற ஒரு சாமியாருக்குரிய இயல்புடன் தனது உள்ளக் கிடக்கையை அந்த சாமியார் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு கூறிய அந்த சாமியார் அங்கே தாமதிக்க விரும்பாதவராக சரி இருளப் போகுது நான் போய்வாறன் என்று கூறி புறப்படத் தயாரானார்.

இளம் வயதாக இருந்தாலும் வீட்டிற்கு வந்த சாமியாரை வெறும் கையுடன் அனுப்புவது பொருத்தமில்லை என அந்த இளம் பெண் யோசித்துள்ளார். சமயப் பாரம்பரியமுள்ள மண்ணில் சமய பாரம்பரியமுள்ள குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் வசந்தாதேவி. ஒரு நொடிப்பொழுதிற்குள்ளேயே யோசித்து முடிவு எடுக்கின்றார். உடனடியாகவே சாமி அறைக்குள் ஓடிச் செல்கின்றார். அங்கே திருநீற்றுத் தட்டில் ஒரே ஒரு ரூபாய் மட்டும் இருந்தது. அந்த ஒரு ரூபாயை எடுத்து வந்து சாமியாரிடம் வழங்குகின்றார். அதனைப் பெற்றுக்கொண்ட சாமியார் சிரித்த முகத்துடன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டார். வெளிக்கதவை திறந்து கொண்டு சாமியார் புறப்பட்டு செல்வதை அவதானித்த இரகுநாதனின் மகள் வீட்டின் பின்புறத் தோட்டத்திற்கு ஓடிவருகின்றார். அங்கே இறைத்துக் கொண்டிருந்த தந்தையாரிடம் நடந்தவற்றை விபரமாக எடுத்துக் கூறுகின்றார்.

தனது மகளிடமிருந்து இவற்றை எல்லாம் விபரமாக அறிந்து கொண்ட இரகுநாதனுக்கு பக்தி கலந்த ஒரு பதட்டமும் பரபரப்பும் ஏற்படுகிறது. உடனடியாகவே இறைப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்துகின்றார். அவசரம் அவசரமாக வீட்டு வாசலுக்கு வந்து சேர்கின்றார். வீட்டின் இரண்டு பக்க வீதிகளில் மட்டுமன்றி அந்த பகுதியிலுள்ள ஏறத்தாழ எல்லா வீடுகளிலும் தேடிப் பார்த்தும் அந்த சாமியாரை எங்கும் காணமுடியவில்லை. ஆனாலும் இரகுநாதன் அத்துடன் ஓய்ந்துவிடவில்லை. துவிச்சக்கர வண்டியிலும் தேடியுள்ளனர். ஆனாலும் அவர் தென்படவில்லை. வன்னி பெருநிலப்பரப்பில் ஓமந்தைப் பகுதியிலுள்ள கொந்தக்காரன் குளம் என்ற இடத்தில்தான் இந்த நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாளும்பொழுதும் சந்நிதி முருகனுடைய சிந்தனையுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர் விநாசித்தம்பி இரகுநாதன். சந்நிதி யிலிருந்து சாமியார் மூலம் ஒரு அழைப்பு வருகிறதென்றால் அது இறை கருணையினால் கிடைத்த அழைப்பாகத்தான் இருக்க முடியும் என்பதை திரு. இரகுநாதன் நன்கு அறிவார். அதனால் தான் அந்த அழைப்பை கூறவந்த சாமியாரை எப்படியாவது சந்தித்து விடவேண்டும் என்ற உச்சமான ஆர்வமும் ஆதங்கமும் அவருக்குள் ஏற்பட்டது. அதன் விளைவாகத்தான் மனித சக்திக்கு உட்பட்டவரை அந்த சாமியாரை அந்த பொழுதிலிருந்து தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஆனாலும் அந்த முயற்சி அவருக்கு கைகூட வில்லை. இது அவருக்கு மிகுந்த ஏமாற்றமாய் அமைந்து விட்டது. கவலையில் மூழ்கியிருந்த இரகுநாதன் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்தார்.

அடுத்த நாள் சந்நிதிக்கு செல்வதென்று முடிவுசெய்தார். அத்துடன் வன்னிப் பகுதியூடாக வடமராட்சிக்கு செல்லுகின்ற முதல் பேருந்திலேயே செல்ல வேண்டுமென்றும் தீர்மானித்தார். அவர் தீர்மானித்தபடியே அடுத்த நாள் காலை ஏழு மணிக்கே பஸ் ஏறி முற்பகல் 11 மணியளவில் சந்நிதிக்கு சென்றுவிட்டார். அங்கே அடியார் மடத்திற்கு சென்று முருகேசு சாமியாரை சந்தித்தார். அவரிடம் “நேற்று எங்கள் வீட்டிற்கு சாமியார் ஒருவர் வந்தவர். அவர்தான் உங்களை வந்து சந்திக்குமாறு நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிய செய்தியைக் கூறினார்" என நடந்தவற்றை இரகுநாதன் எடுத்துக் கூறினார்.

இரகுநாதன் கூறுவதை முருகேசு சுவாமிகள் பொறுமை யாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார். சிறிது நேர இடைவெளிக்குப் பின்பு முருகேசு சுவாமிகள் இரகுநாதனைப் பார்த்து பின்வருமாறு கூறுகிறார். விவசாயம் பொய்த்துவிட்டது. இப்பொழுது சரியான கஷ்டம். நான் ஏன் உன்னை இங்கே வரச் சொல்லப்போறன் என்ற யதார்த்தத்தை அவருக்கு கூறுகின்றார். 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தினால் மட்டுமன்றி வன்னி உட்பட தமிழர் பகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளப்பெருக்கு காரணமாக விவசாயமும் அழிவடைந்து ஒட்டுமொத்த தமிழர்களும் பாதிக்கப்பட்டிருந்த காலகட்டம் அது.

இவ்வாறு யதார்த்தத்தை வெளிப்படுத்திய முருகேசு சுவாமிகள் சந்நிதியானுடைய மூலஸ்தானம் அமைந்துள்ள பக்கம் தனது தலையை மெதுவாகத் திருப்புகிறார். அவ்வாறு தலையைத் திருப்பியவாறு தனது வலது கையினால் சைகையினால் மூலஸ்தானத்தை சுட்டிக்காட்டுகின்றார். அவ்வாறு சந்நிதியானது மூலஸ்தானத்தை சுட்டிக்காட்டியவாறு இரகுநாதனிடம் தனது வழமையான புன்சிரிப்புடன் **"உவர்தான் உன்னை இங்கே வரச்சொன்னவர்"** என்ற உண்மையையும் வெளிப்படுத்துகின்றார்.

தனது ஞானத்தினால் சந்நிதியானது திருவிளையாடலை உணர்ந்துகொண்டு இரகுநாதனிடம் இவ்வாறு கூறிய முருகேசு சுவாமிகள் ஏதோ மனதிற்குள் முடிவு செய்கின்றார். அவ்வாறு முடிவு செய்தவர் "சரி நீ போய் ஆற்றில் மூழ்கிவிட்டுவா" என இரகுநாதனிடம் கேட்டுக்கொள்கிறார்.

சந்நிதியில் இருந்து முருகேசு சுவாமிகள் தான் தன்னை அழைத்துள்ளார் என நினைத்து வன்னியிலிருந்து சந்நிதிக்கு ஓடிவந்தவர் இரகுநாதன். அவருக்கு இப்பொழுது உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிகிறது. இது சந்நிதியில் இருந்து வந்த ஒரு சாதாரண அழைப்பு அல்ல. இது சந்நிதிக்கு வருமாறு சந்நிதியானே நடாத்திய திருவிளையாடல் என்ற உண்மையை ஐயம் திரிபுற உணர ஆரம்பிக்கின்றார்.

இவ்வாறு உள்ளம் முழுவதும் நிறைந்த பக்தி உணர்வு களுடன் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் மேற்கு திசையில் அமைந்துள்ள ஆற்றங்கரையை வந்தடைகின்றார். ஆற்றில் மூழ்கி ஆலய வழிபாட்டையும் நிறைவுசெய்து கொள்கின்றார். அதன்பின்பு நேராக அடியார் மடத்திலிருக்கும் முருகேசு சுவாமி களிடம் வந்து சேர்கின்றார். அப்பொழுதுதான் அங்கே இரகுநாதனுக்கு கலியுகக் கடவுளான சந்நிதி முருகனது அழைப்பின் தார்ப்பரியம் முழுமையாக விளங்குகிறது. அந்த அழைப்பு ஏன் நடந்தது என்ற உண்மையான விபரங்களும் வெளிப்படத் தொடங்குகிறது.

இரகுநாதனுடைய தந்தையார் விநாசித்தம்பி பல வருடங் களுக்கு முன்பு சந்நிதிக்கு வந்துள்ளார். இங்கே முருகேசு சுவாமிகளைச் சந்தித்து அவரிடம் தமது குடும்ப பரம்பரை தொடர்பான சில பொறுப்புகளை பணிவுடன் கையளித்துள்ளார். அடியவர்களை நாடிச்சென்று நல்லவற்றை செய்கின்ற இயல்புடையவர் முருகேசு சுவாமிகள். அப்படிப்பட்டவர் அப்பொழுதே விநாசித்தம்பி கூறியவற்றை தமது கொப்பியில் பதிந்தும் வைத்துள்ளார். இப்பொழுது தந்தையார் விநாசித்தம்பி தன்னிடம் ஒப்படைத்த அந்த கடமைகளை அவரது மகன் ரகுநாதனிடம் முருகேசு சுவாமிகள் எடுத்துக் கூறுகின்றார்.

1971ஆம் ஆண்டு மாசி மகத்தில் இராகுதிசையில் ராகுவால் தனக்கு ஆயுள் நெருங்குகிறது என்ற விபரத்தை இரகுநாதன் தந்தையார் விநாசித்தம்பி முருகேசு சுவாமிகளிடம் எடுத்துக் கூறியுள்ளார். இதனால் தான் இல்லாத நிலையில் குருவாக இருந்து தக்க காலம் வரும்பொழுது தனது மகன் இரகுநாதனிக்கு சோதிடம், வைத்தியம் மற்றும் தியான வழிபாடு என்பவற்றை எல்லாம் கற்றுக்கொடுத்து குரு தீட்சையும் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமாறு முருகேசு சுவாமிகளிடம் விநயமாகக் கேட்டுள்ளார். இதன் பின்பு இரகுநாதனுடைய தந்தையார் அவர் எதிர்பார்த்தது போல இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அமரர் விநாசித்தம்பி முருகேசு சுவாமிகளிடம் விநயமாக வேண்டிக் கொண்டவற்றை எல்லாம் நிறைவேற்றி முடிப்பதற் கான காலம் தற்பொழுது கனிந்துவிட்டது. இதனால் தான் சந்நிதியான் தற்பொழுது இரகுநாதனை தன்னிடம் அழைத்து வந்திருப்பதை முருகேசு சுவாமிகள் உள்வாங்கிக் கொள்கின் றார். அது மட்டுமல்ல இறையருள் நிறைந்த இந்த உண்மைகளை முருகேசு சுவாமிகள் தன்னிடம் வந்திருக்கும் இரகுநாதனிடம் பக்குவமாக எடுத்துக் கூறுகின்றார்.

சந்நிதி முருகன் கருணை நிறைந்த கடவுள் என்றுதான் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் அடியவருக்கு அடியவராகவும் தொண்டருக்கு தொண்டனாகவும் மானிட உருவமெடுத்து செயற்பட்டு எங்கள் உள்ளங்களை நெகிழவைக்கின்ற கலியுகக் கடவுளாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறான். அமிர்தத்திலும் இனிமையான கண்கண்ட தெய்வமாக விளங்கிக் கொண்டிருக் கும் சந்நிதியானது பெருமைகளையும் சிறப்புக்களையும் அதே நேரம் அடியவருக்காக செயற்படுகின்ற அந்தத் தாய் உள்ளத்தை யும் நாம் வெறும் வார்த்தைகளால் வெளிப்படுத்தி விடமுடியுமா?

முருகேசு சுவாமிகள் ரகுநாதனுக்கு வெளிப்படுத்தியது போல அடுத்த நாள் சந்நிதியில் உள்ள எல்லா மூர்த்திகளுக்கும் அந்தந்த சந்நிதானங்களில் கும்பங்கள் வைத்து அபிஷேகங்கள் நடத்தப்படுகின்றன. அன்று உலககுருநாதன் ஐயர் பிரதம பூசகராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். சந்நிதியா னுடைய அபிஷேகத்தின்பொழுது புனித தீர்த்தம் சேகரிக்கப் படுகிறது.

அந்த புனித தீர்த்தத்தினால் முருகேசு சுவாமிகள் இரகுநாதனையும் புனிதப்படுத்துகின்றார். தொடர்ந்து முறைப் படி ரகுநாதனுக்கு முருகேசு சுவாமிகள் குருதீட்சையும் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கின்றார். அது மட்டுமன்றி இரகுநாதனுடைய தந்தையார் கேட்டுக்கொண்டபடி வைத்தியம், சோதிடம் உட்பட அனைத்து விடயங்களையும் இரகுநாதனுக்கு கற்றுக் கொடுக்கின்றார்.

நடந்தவற்றையெல்லாம் இரகுநாதன் ஒவ்வொன்றாக மீட்டுப் பார்க்கின்றார். அவரது தந்தையார் 1971ஆம் ஆண்டு காலமாகும்பொழுது வாகடத்தைத் தூக்கிக் கொடுத்து நீ 7வது பரம்பரை என தெரிவித்துள்ளார். இவ்வாறு தமது பரம்பரைக் கடமையை தன்னிடம் ஒப்படைத்து கூறிய வார்த்தைகளைச் சிந்திக்கின்றார். தற்பொழுது காலம் கனிந்துள்ள நிலையில் சந்நிதியானே எல்லாவற்றையும் நடாத்தி வைக்கின்ற அற்புதத்தையும் உணருகின்றார். இவற்றை முழுமையாக உணருகின்றபொழுது ஆனந்தமும் மனநிறைவும் மட்டுமல்ல ஆனந்தக் கண்ணீரும் அவருக்கு தாரைதாரையாகக் கொட்டு கிறது.

சில வருடங்களுக்கு முன்பு கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இரகுநாதன் அவர்கள் இவற்றையெல்லாம் மனம் விட்டு அடியேனுடன் பகிர்ந்துகொண்டார். அது மட்டுமன்றி இந்த விடயங்களை விபரமாக எழுத்திலும் எழுதி அடியேனிடம் கையளித்துள்ளார்.

இரகுநாதனுடைய தந்தையார் இது ஏழாவது பரம்பரை. இத்துடன் இது அற்றுப்போகும் போல இருக்கு என அப்பொழுது கூறியதாகவும் குறிப்பிட்டார். தந்தையார் தெரிவித்தது போல இந்த பாரம்பரிய வைத்தியத் தொழில் முடிந்துவிடும் என்பதை இரகுநாதன் அடியேனுடன் கவலையுடன் பகிர்ந்துகொண்டார்.

ஆம், தற்பொழுது ரகுநாதன் அவர்களும் காலமாகி விட்டார். ஈழத்தமிழர்களின் பாரம்பரியங்களும் பரம்பரைக் கடமைகளும் நிறைவுபெற்றுக் கொண்டிருக்கின்ற காலப்பகுதி யில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தெய்வங்கள்தான் எம்மை காப்பாற்ற வேண்டும்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகேசு சுவாமிகள்



ரகுநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம் - 04

அவ்வப்பொழுது சந்நிதியானிடம் வந்து வழிபட்டுச் செல்கின்ற அடியவர்கள், சிறுவயதிலிருந்தே வழிபட ஆரம்பித்து இன்று தள்ளாடும் வயதுவந்துவிட்ட காலத்திலும் வந்து வழிபட்டுச் செல்லும் அடியவர்கள், ஒரு ஒழுங்குமுறையில் சந்நிதியானிடம் வந்து வழிபட்டுச் செல்லும் அடியவர்கள் என பலவகைப்பட்ட அடியவர்களையும் அடியேன் சந்தித்து உரையாடியிருக்கின்றேன். இவர்களின் அனுபவங்களையும் உள்வாங்கியுள்ளேன்.

ஒரு முறை மட்டுமே சந்நிதியானை வந்து வழிபட்டுச் சென்ற அடியவர்களும் பலர் இருக்கின்றனர். அடியேன் வவுனியாவில் கடமையாற்றிக் கொண்டிருந்த காலகட்டத்தில் ஒரு முறை மட்டுமே சந்நிதியானிடம் வந்து வழிபட்டுச் சென்ற அடியவர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் ஒருமுறை மட்டுமே சந்நிதிக்கு வந்து வழிபட்டுச் சென்றிருந்த அடியவராக இருந்தபொழுதிலும் வாழ்நாள் முழுவதும் சந்நிதியானை உள்ளத்தால் வழிபட்டுக் கொண்டிருக்கின்ற அடியவராக தான் வாழ்ந்து வருவதாகக் தனது அனுபவங்களை அடியேனுடன் பகிர்ந்துகொண்டார்.

திரு. வேலுப்பிள்ளை அருணகிரிநாதன் அவர்கள் வலிகாமப் பகுதியைச் சேர்ந்தவர். 2006ஆம் ஆண்டு காலகட்டத்தில் வவுனியாவில் சிரேஸ்ட சட்டத்தரணியாகவும் பதில் நீதிபதியாகவும் கடமையாற்றிக் கொண்டிருந்த காலகட்டத்தில் இவருடன் நெருக்கமாகப் பழகுகின்ற சந்தர்ப்பம் அடியேனுக்கு கிடைத்தது. தொழில் தர்மம், நேர்மை என்பவற்றுடன் முழுமையான இறை நம்பிக்கையுள்ளவராகவும் வாழ்ந்துகொண்டிருந்ததினால் இந்த நெருக்கம் அடியேனுக்கு ஏற்பட்டது. அப்பொழுது அவர் பகிர்ந்துகொண்டதை இங்கே அடியவர்களுக்கு வெளிப்படுத்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் 1990ஆம் ஆண்டு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு முதல் முறையாக பஸ்சில் பிரயாணம் செய்து சந்நிதியானை வழிபாடு செய்ய வந்துள்ளார். ஆலயத்திற்குள் ஆசார முறைப் படி செல்லவேண்டுமென்பதால் மேல் அங்கியை கழட்டி வேட்டி யுடன் ஆலயத்திற்குள் சென்று பூசையிலும் பங்குபற்றி வீதி வலம் வந்து சந்நிதியானை உள்ளம் உருகி வழிபாடும் செய்துள்ளார். இவ்வாறு உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையான வழிபாட்டை மேற்கொண்ட அருணகிரிநாதனுக்கு அது ஒரு புது அனுபவமாக இருந்துள்ளது. வேறு எங்குமே ஏற்படமுடியாத ஒரு ஆன்மிக நிறைவும் உள்ளத்தில் ஏற்படுவதை உணர்ந்துகொண்டார்.

வித்தியாசமான சூழலில் அதேநேரம் எளிமையாக அமைந் திருக்கின்ற சந்நிதி ஆலயத்தை உற்று நோக்குகின்றார். வழிபாட் டிற்காக ஒன்றுகூடுகின்ற அடியார்களின் இயல்புகளையும் அவர்கள் வழிபாடு செய்கின்ற பாங்கினையும் நன்கு அவதானிக் கின்றார். இவற்றை எல்லாம் உள்வாங்கிய திரு.அருணகிரிநாதன் அவர்கள் இது ஒரு புதுமையான கடவுள் குடிகொண்டிருக்கின்ற இடம் என்பதையும் முழுமையாக உணர்ந்து கொள்கின்றார்.

இவ்வாறான உணர்வலைகளுடன் தன்னை மறந்த நிலையில் அருணகிரிநாதன் ஆலய தரிசனத்தை நிறைவுசெய்து கொண்டார். தான் பஸ் வண்டியிலேயே ஆலயத்திற்கு வந்திருந்த நிலையில் மீண்டும் பஸ் வண்டியின் மூலம் வீடு திரும்புவதற்கு ஆயத்தமானார்.

இவ்வாறு பஸ்சில் பிரயாணம் செய்து வீடு திரும்ப ஆயத்த மான அந்த வேளையில்தான் தான் பஸ் பிரயாணத்திற்காக கொண்டு வந்த பணத்தை தனது வேட்டி மடிப்பில் அரையில் சொருகி வைத்திருந்தது அவருக்கு ஞாபகத்திற்கு வந்தது. பதட்டத்துடன் அரையில் சொருகியிருந்த பணத்தை கை விரல் களால் தடவிப் பார்த்தார். சொருகிவைத்திருந்த பணம் எதுவும் அங்கே இருக்கவில்லை. அவர் பூசையில் பங்குபற்றி வீதிவலம் வந்து ஆலய தரிசனத்தை மேற்கொண்ட வேளையில் அவர் அவ்வாறு வேட்டியில் பணத்தை சொருகி வைத்திருந்ததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றாக மறந்துவிட்டார். இதனால் அவரை அறியாமலே அவரது பணம் முழுவதும் அங்கே விழுந்து தொலைந்துவிட்டது.

பணம் முழுவதும் தொலைந்துவிட்ட நிலையில் வீடு திரும்புவதற்கு பஸ்சிற்கு பணம் கொடுப்பது எப்படி என்று திரு. அருணகிரிநாதன் அவர்கள் கலக்கமடையலானார்.

"நான் பிரயாணம் செய்வதற்கு கொண்டுவந்த பணம் தொலைந்துவிட்டது எனக்கு பணம் தாருங்கள் என்று ஆலயத்தில் நின்று எவ்வாறு கேட்கமுடியும். அவ்வாறு முன்பு அறிமுகமில்லாதவர்களிடம் கேட்கும்போது அதனை அவர்கள் நம்புவார்களா? ஏமாற்றிப் பணம் வாங்குவதற்காகத்தான் இவ்வாறு கேட்பதாக அவர்கள் சந்தேகம் கொள்ளமாட்டார் களா?" என்று பலவிதமாக திரு. அருணகிரிநாதன் அவர்கள் தனக்குள் சிந்திக்கத் தொடங்கினார். உண்மையில் ஆலயத்தில் நின்று ஒருவர் அவ்வாறு கேட்கும்பொழுது மற்றவர்கள் அதனை சந்தேகிப்பது நியாயமானதே என தனக்குள் சிந்தித்த திரு. அருணகிரிநாதன் அவர்கள் அவ்வாறு யாரிடமும் யாசித்து பணத்தைப் பெற்றுக்கொள்ளுவது முறையற்றது என முடிவு செய்தார்.

மேலும் அடியவர்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் வழங்குகின்ற கருணை உள்ளம் படைத்தவன் சந்நிதியான் என்ற நம்பிக்கையும் அவருக்குள் இருந்தது. அதனால் மனமுருகி வழிபாடும் செய்துள்ளார். இந்த நிலையில் சந்நிதியான் தன்னை வீட்டிற்கே திருப்பிச் செல்லமுடியாத நிலைக்கு ஆளாக்கி விட்டானே என்ற கவலையும் ஏற்பட்டது. மேலும் இயல்பாகவே யாரிடமும் எதனையும் இரந்துகேட்கும் இயல்பில்லாத எனக்கு இவ்வாறான ஒரு சங்கடமான நிலை ஏற்பட்டுவிட்டதே எனவும் கவலையடைந்துள்ளார்.

இவ்வாறு தனக்கு ஏற்பட்ட சங்கட நிலையினால் பலவாறு ஆதங்கப்பட்டாலும் திரு. அருணகிரிநாதனின் இவ்வாறான சிந்தனை நீண்டநேரம் நீடிக்கவில்லை. அவர் சிறிது நேரத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளேயே தனது அறியாமையை நினைத்து மனம் வருந்திய துடன் தன்னையே நொந்துகொண்டார். நான் கவனமாக எனது பணத்தை பாதுகாக்காது கவனக்குறைவாக இருந்து பணத்தை தொலைத்துவிட்டு சந்நிதியானை நொந்து கொள்வதும் சந்நிதியான் மீது பழிசுமத்துவதும் தவறு என்பதை உணர்ந்து தனது அறியாமைக்காக மனம் வருந்தினார். மேலும் தனது தவறுக்காக தன்னை மன்னித்தருளுமாறு சந்நிதியானிடம் வேண்டுதலும் செய்தார்.

ஆனாலும் திரு. அருணகிரிநாதன் அவர்கள் அறிமுகமில் லாத எவரிடமும் பணத்தைப் பெற்றுக் கொள்வதில்லை என்பதில் உறுதியாக இருந்தார். ஆலயத்தில் உரிமையுடன் பணத்தை கேட்டுப் பெற்றுக் கொள்ளக்கூடிய மிகவும் அறிமுக மானவர்களிடம் இருந்து மட்டுமே தனது பஸ் பிரயாணத்திற்கு பணத்தைப் பெற்றுக் கொள்வதென்ற முடிவில் உறுதியாக இருந்தார். ஆனாலும் நீண்ட நேரமாகியும் இவர் எதிர்பார்த்தது போல ஆலய சூழலில் அவ்வாறு அறிமுகமானவர்கள் எவரையும் இவரால் காணமுடியவில்லை.

திரு. அருணகிரிநாதன் அவர்கள் மனம் தளரவில்லை. சந்நிதியான் கருணை உள்ளம் கொண்டவன். அடியவர்களின் வேண்டுதல்களை எல்லாம் நிறைவேற்றுகின்ற கண்கண்ட தெய்வம் என்பதை பல சந்தர்ப்பங்களில் தனது தந்தையார் பலருக்குக் கூறியதை மனதில் ஆழமாகப் பதித்து வைத் திருந்தார். மெய்யடியார்களின் அன்புக்கு கட்டுப்படுகின்ற சந்நிதி முருகன் தன்னை மட்டும் தவிக்கவிடுவானா? தான் வீடு செல் வதற்கு எப்படியும் அவர் வழிகாட்டத்தானே வேண்டும் என்ற நம்பிக்கை அவரை அறியாமலே அவருக்கு ஏற்படத் தொடங் கியது. இறுதியில் அந்த நம்பிக்கை ஒரு வைராக்கியமாகவே மாறிவிட்டது. இருந்தபோதும் இவருக்கு அறிமுகமான எவரை யும் ஆலயச் சூழலில் நீண்டநேரமாக காணாதநிலையில் திரு. அருணகிரிநாதன் அவர்கள் அங்கேயே தங்கியிருக்கலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நைவேத்தியமாகப் படைத்த பிரசாதங்களை மூலஸ் தானத்தில் முழுமுதற் கடவுளாக வீற்றிருக்கும் பொல்லப் பிள்ளையார் உட்கொள்ளாத நிலையில் அவை அப்படியே இருப்பதை அவதானித்த சிறுவனான நம்பியாண்டார் நம்பி தனது பூசையில்தான் ஏதோ தவறு நேர்ந்துவிட்டது என கலக்க மடைந்தார். அது மட்டுமல்ல பூசையில் தவறு நேர்ந்ததால்தான் பிள்ளையார் நைவேத்தியத்தினை உட்கொள்ளவில்லை என எண்ணி தனது தலையை அந்த சிறுவன் அங்கே உள்ள சுவரில் மோதச் சென்றபொழுது சிறுவனான நம்பியாண்டார் நம்பியின் வஞ்சகமில்லாத பக்தியை மெச்சி அந்த அமுதினை பிள்ளையார் உட்கொண்டதை எமது புராணம் எமக்கு எடுத்துக் கூறுகிறது.

இதேபோன்றுதான் இங்கேயும் சந்நிதியான் கருணை உள்ளம் கொண்ட கடவுள் என்று நம்பி தனது ஆலயத்திற்கு வருகைதந்து தன்னை உள்ளம் உருகி வழிபாடு செய்த திரு. அருணகிரிநாதனின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் மேலும் சோதிக்கவிரும்பாது சந்நிதியான் தனது கருணையை வெளிப் படுத்த சித்தம்கொண்டான்.

திரு. அருணகிரிநாதன் அவர்களுடன் மிக நெருக்கமாகப் பழகும் ஆவரங்காலைச் சேர்ந்த திரு. அருணாசலம் என்ற நண்பனை சந்நிதியான் அங்கே ஆலயத்தில் தோன்றச் செய்தான்.

ஆலய வழிபாட்டிற்காக தனது நண்பர்கள் சிலருடன் அருணாசலம் அங்கே சந்நிதியானிடம் வந்திருந்தார். சற்றும் எதிர்பாராது தனது நண்பனை அருணகிரிநாதன் அங்கே சந்திக்கின்றார். அருணகிரிநாதனின் உள்ளம் அகமகிழ்ந்தது. உரிமையுடன் தனது நண்பனிடம் சென்று பஸ்சிற்குரிய பணத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்கின்றார்.

சந்நிதியானது கருணை என்ற அந்த ஆனந்த வெள்ளத் தில் மிதந்தவாறே புதிய பக்தி அனுபவத்துடன் அவர் பஸ்சில் வீடு சென்றடைகின்றார்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம் - 05

சந்நிதியில் அமைந்துள்ள மடப்பள்ளியை சந்நிதி ஆலயத்திற்கென்றே விஷேடமாக அமைக்கப்பட்ட அல்லது அவ்வாறு அமைந்திருக்கின்ற ஒரு மடப்பள்ளியாக நாம் கருதவேண்டியுள்ளது. பொதுவாக சந்நிதியில் வழங்கப்படுகின்ற பிரசாதங்கள் அனைத்தையும் அடியார்கள் மருந்தாக நினைத்து அவற்றை ஆலயத்திலும் மடப்பள்ளியிலும் பெற்றுச்செல்வது வழக்கம். இதனால் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் பூசகர்கள் பெருமளவு அமுதினை மடப்பள்ளியில் தயாரித்து அடியார்களின் விருப்பங்களைப் பூர்த்திசெய்து வருகின்றனர். இவ்வாறு பெரியளவில் தேவைப்படும் அமுதினைத் தயாரிப்பது மற்றும் ஆலயத்தால் அடிக்கடி அன்னதானம் வழங்கப்படும்பொழுது மேற்கொள்ளப்படும் சமையற் செயற்பாடுகள் எல்லாம் மேற்படி மடப்பள்ளியிலேயே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த மடப்பள்ளிக்குள் இன்னொரு மடப்பள்ளி செயற் பட்டுக் கொண்டிருக்கின்றது. மூலஸ்தான முருகனுக்கு ஒவ்வொரு பூசையின் பொழுதும் படைக்கப்படும் நைவேத்தியம் இங்கேதான் தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறு விஷேடமாக வடிவமைக்கப்பட்ட இந்த மடப்பள்ளிக்குள் பூசகர் குடும்பங் களைச் சேர்ந்தவர்களைத் தவிர வேறு யாரும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. அத்துடன் மூலஸ்தானத்திற்குச் சென்று பூசை செய்கின்ற அல்லது தீபம் காட்டுகின்ற தகுதியில் உள்ளவர்களாலேயே சந்நிதியானுக்குப் படைக்கப்படும் நைவேத்தியம் தயாரிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டு மல்ல இந்த விஷேட மடப்பள்ளிக்குள் பூசகர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் செல்வதில்லை.

பொதுவாக பூசைக்குரிய எல்லா முன் ஆயத்தங்களும் செய்யப்பட்டபின் பிரத்தியேகமான இந்த மடப்பள்ளிக்குள் தயாரிக்கப்பட்ட நைவேத்தியம் ஆலயத்திற்குள் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்படும். இவ்வாறு தகுதியும் பக்குவமும் வாய்ந்த பூசகர்களால் கொண்டு செல்லப்பட்ட அமுதினை ஆலம் இலைகளில் ஆவி பறக்கின்ற நிலையில் மூலஸ்தானத்தில் படைப்பார்கள்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்துக்குச் செல்கின்ற ஒரு அடியவர் அங்கே ஆலயத்தின் வடகிழக்குத் திசையில் அமைந் துள்ள மடப்பள்ளியின் பிரதான வாசலால் உள்ளே சென்றவுடன் தனது வலதுபக்கமாக உற்றுநோக்குவதன் மூலம் இங்கே நாம் குறிப்பிடுகின்ற இந்த தனித்துவமானதும் புனிதமானதுமான அந்த மடப்பள்ளியை இனங்காணமுடியும். புனிதமான இந்த சிறிய மடப்பள்ளிக்குள்தான் மிகவும் புனிதமான முறையில் சந்நிதி முருகனுக்கு நைவேத்தியம் தயாரிக்கப்படுகின்றது. மிகவும் தனித்துவமான நைவேத்தியம் தயாரிக்கப்படுவதென் றால் என்ன என்பதையும் இங்கே வெளிப்படுத்துவது பொருத்த மானது.

இங்கே உடல் தூய்மை, உளத் தூய்மை, பயன்படுத்தப்படும் பொருட்களின் தன்மை, அவற்றின் சுத்தம் என்பன எல்லாம் மிகவும் கவனமாக நோக்கப்பட்டே அந்த விஷேடமான மடப் பள்ளிக்குள் நைவேத்தியம் தயாரிக்கப்படுகின்றது. கண்ணப்ப நாயனார் காளத்தியப்பருக்கு எவ்வாறான மனப் பக்குவத்துடன் மான் இறைச்சியைப் படைத்தாரோ அவ்வாறான மனப் பக்குவத் துடனேயே இங்கேயும் பூசகர்கள் சந்நிதியானுக்கு நைவேத்தியத் தைப் பக்குவப்படுத்தி படைத்து வருகின்றனர். மருதர் கதிர்காம ரிடம் சந்நிதி முருகன் தனக்குப் பசிக்கிறது ஆலம் இலையில் அமுது படைக்குமாறு கேட்டபொழுது மருதர் கதிர்காமர் தனக்கு அந்தப் பக்குவம் இல்லை என்று தயக்கம் காட்டினார். ஆனாலும் சந்நிதியானின் பசியைப் போக்குவதற்கான அமுது என்ற நிலையில் உடலாலும் உள்ளத்தாலும் மிகவும் உயர்நிலைக்கு தன்னைப் பக்குவப்படுத்தி மருதர் கதிர்காமர் நைவேத்தியத்தைப் படைத்துள்ளார். இதேபோல இன்றும் சந்நிதியில் பூசகர்கள் அதனை அப்படியே தொடர்ந்து கடைப்பிடித்து வருவதை இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வெளிப்படுத்துவது பொருத்தமானது. மேலும் இந்த புனித மான மடப்பள்ளியில் பயன்படுத்தப்படும் பொருட்கள் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும். உதாரணமாக காலைப் பூசைக்கு வடை சுடுவதற்குப் பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் மதிய பூசைக்கோ, மாலைப் பூசைக்கோ பயன்படுத்துவதில்லை.

இவ்வளவு புனிதம் நிறைந்த சந்நிதியானது விசேட மடப் பள்ளியை எவ்வாறு பேணவேண்டும் என்பதை பூசகர்களும் இந்தப் பகுதி அடியவர்களும் நன்கு அறிந்து வைத்துள்ளனர். இவ்வாறு இது பற்றி நன்கு தெரிந்த தொண்டைமானாற்றைச் சேர்ந்த அடியார் ஒருவரது கண்ணெதிரே இதுபற்றி எதுவுமே தெரியாத ஒரு சாதாரண சந்நிதியானது அடியாரது செயற்பாடு எவ்வாறு அமைந்தது எனவும் அது தொடர்பாக ஏற்பட்ட ஒரு அற்புத நிகழ்வினையும் இங்கே வெளிப்படுத்துகின்றோம்.

தற்போது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வயதிலும் அனுபவத்திலும் மூத்த பூசகராக விளங்குபவர் ஆறுமுகசாமி ஐயர் அவர்களாவர். முருகப்பெருமானுக்கு சாத்துப்படி செய்வதில் கைதேர்ந்தவர். அவருக்கு நிகர் அவரே என அனைவராலும் இன்றும் போற்றப்படுபவர். தற்பொழுது 85 வயதைத் தாண்டிய இந்தப் பூசகரை சின்ன ஆறுமுகசாமி ஐயர் என்றே எல்லோரும் அழைப்பது வழக்கம். இவர் பிரதம பூசகராக வருவதற்கு முன்பு நீண்ட காலமாக அந்த புனித மடப்பள்ளியில் நைவேத்தியம் தயாரிக்கின்ற செயற்பாடுகளில் அடிக்கடி ஈடுபடுவதுண்டு. இவரது இளமைக் காலத்தில் வருடாந்த உற்சவத்தின்பொழுது ஒருநாள் காலைப் பூசைக்காக ஆறுமுகசாமி ஐயர் அந்த மடப்பள்ளிக்குள் அமுதினை தயார்செய்து கொண்டிருக்கும் பொழுது வெளியில் ஏதோ சத்தம் கேட்பது போல் இருந்துள்ளது.

அவர் மடப்பள்ளிக்கு வெளியில் எட்டிப்பார்த்த பொழுது தொண்டைமானாற்றைச் சேர்ந்த திரு. சின்னக்கண்டு அவர்கள் ஒரு அடியவரை மிகவும் கடினமான தொனியில் அதட்டிக் கொண்டிருந்தார். என்ன விடயம் என ஆறுமுகசாமி ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் கேட்டபொழுது அங்கே நின்ற அந்த அடியவர் ஒருவர் மடப்பள்ளிக்குள் இருந்த குழாயில் தண்ணீர் எடுத்து கால்களைக் கழுவியதுடன் வாய் கொப்பளித்த நீரை அங்கேயிருந்த வாய்க்காலுக்குள் கொப்பளித்ததையும் கோபத்துடன் எடுத்துக் கூறியுள்ளார். இவ்வாறு ஆறுமுகசாமி ஐயருக்கு திரு. சின்னக்கண்டு அவர்கள் எடுத்துக்கூறி எவ்வளவு புனிதமான இந்த இடத்தினை இந்த நபர் களங்கப்படுத்தியதை எப்படிப் பொறுத்துக்கொள்வது எனக்கூறி மீண்டும் அந்த நபரை அதட்டி அடிப்பது போலவும் நெருங்கிச் சென்றுள்ளார். ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் அதனைப் பெரிதுபடுத்த அனுமதிக்காது சரி நடந்து முடிந்துவிட்டது என சமாதானம் கூறி அடியவர் சின்னக்கண்டுவை அனுப்பிவிட்டு மடப்பள்ளிக்குள் சென்று மீண்டும் நைவேத்தியம் தயாரிக்கின்ற அந்த செயற்பாட்டில் ஈடுபடலானார்.

மறுநாள் ஆறுமுகசாமி ஐயர் அதே விதமாக அங்கே காலையில் அமுது தயாரிக்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்துள்ளார். அப்பொழுது திரு. சின்னக்கண்டு அவர்கள் மிகவும் சஞ்சலத்துடன் அங்கே வருகை தந்துள்ளார். சின்னக்கண்டு என்பவர் அமரர் சிவசம்பு வைத்தியரின் மாமனார் என்பதை பலரும் அறிவார். இவர் ஆறுமுகசாமி ஐயரிடம் நடந்த சம்பவத்தை கலக்கத்துடன் எடுத்துக்கூறினார்.

முதல்நாள் இரவு தான் நித்திரையில் இருக்கும்பொழுது ஒரு சிறுவன் வந்து தன்னைத் தட்டி எழுப்பி **"நீ கோயிலுக்கு வந்தால் அங்கே உன்னுடைய வேலையை மட்டும் பார்க்க வேண்டும். அங்கே நடப்பவற்றை எல்லாம் நான் பார்த்துக் கொள்வேன்"** என்று கூறியதாகவும் தான் பதைபதைப்புடன் கண்களை விழித்துப் பார்த்தபொழுது அங்கு யாரையும் காண முடியவில்லை என்றும் உடல் புல்லரிக்க எடுத்துக் கூறினார். உடனடியாகவே இது சந்நிதியானுடைய திருவிளையாடல் என்பதை உணர்ந்து கொண்டு பிராயச்சித்தமாக இன்றைய காலைப் பூசைக்கு அவனிடம் ஓடிவந்துள்ளேன் என்று திரு. சின்னக்கண்டு அவர்கள் கண்ணீர் மல்க எடுத்துக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கு வழிபடவந்த ஒருவர் தெரியாமல் செய்த தவறுக்காக தான் அவசரப்பட்டு தண்டனை கொடுக்க முயற்சித்தது உண்மையில் ஒரு பிழையான விடயம் என்று இப்பொழுது உணர்ந்துள்ளதாகவும் ஆறுமுகசாமி ஐயரிடம் உள்ளம் உருகி சின்னக்கண்டு எடுத்துக்கூறினார். ஆறுமுகசாமி ஐயரும் அவருக்கு ஆறுதல் கூறியுள்ளார். அதேநேரம் இந்த அனுபவத்தைத் தான் நாம் எல்லோரும் சந்நிதியானிடமிருந்து முதலில் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற உண்மையையும் திரு. சின்னக்கண்டு அவர்களுக்கு எடுத்துக் கூறி அவரை அன்புடன் அனுப்பிவைத்துள்ளார்.

நாம் எல்லோரும் சந்நிதியானது அடியவர்கள். வழிபடச் சென்றால் அமைதியாக வழிபடுவது. தானம் வழங்கச் சென்றால் அடக்கமாக அதனை வழங்குவது, தொண்டு செய்யச் சென்றால் தூய்மையாகவும் உண்மையாகவும் அதனை நிறைவேற்றுவது இவ்வாறுதான் எமது செயற்பாடுகள் சந்நிதியில் நிகழவேண்டும். பக்குவப்பட்டவர்கள் இதனையே சந்நிதியில் கடைப்பிடித்து வருகின்றனர்.

உண்மையில் ஆலயத்திற்கு வழிபடவந்த அடியவர் நடந்து கொண்ட முறை தவறானதாக இருக்கலாம். ஆனால் அந்தத் தவறினை அவருக்கு எப்படிச் சுட்டிக்காட்டுவது அல்லது அவரை எப்படித் திருத்துவது என்பது அந்த அடியவருக்கும் சந்நிதியானுக்குமுள்ள ஒரு விடயம். அதனை சந்நிதியானே பார்த்துக் கொள்வான். இதுதான் இங்கே உள்ள யதார்த்தம்.

தன்னை நாடி வந்த அடியவன் தெரியாமல் தவறு செய்துள்ளான். அவனைத் தண்டிக்க முயற்சித்த அடியவரிடம் அன்றே சென்று செயற்பட்ட சந்நிதியான் எங்கள் உண்மையான வழிபாட்டிற்கும் உடனடியாகவே கருணைமழை பொழிவான். அதில் எள்ளளவும் சந்தேகமில்லை. வாருங்கள் வந்து அவன் அருள் பெற்று ஏகுங்கள்.


ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருணகிரிநாதன்



ஆறுமுகசாமி ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம் - 06

நாம் தொலைபேசியினூடாக உரையாடும்பொழுது நமக்கு பரிட்சயமான சில குறிப்பிட்ட மனிதர்கள் மற்றும் குறிப்பிட்ட வகையான தொழில்களில் ஈடுபடுபவர்கள், பன்முகச் சமூகச் செயற்பாட்டாளர்கள் போன்றவர்களுடன் குறுகிய நேர உரை யாடலில் ஈடுபடுவதுதான் பொருத்தமானது. அன்றும் இவ்வாறு தான் உரையாட வேண்டுமென நினைத்துக்கொண்டு அவருடன் தொடர்புகொண்டேன். தொடர்பு கிடைத்தது. அவரிடம் நான் கேட்கவேண்டிய விடயத்தை விரைவாகக் கேட்டுவிட வேண்டு மென நினைத்துக்கொண்டு கதைக்க ஆரம்பித்தேன். நான் கதைத்துக் கொண்டிருக்கும்பொழுதே நடுவில் எனது கதையை அவரே நிறுத்த முயற்சித்தார். அதுமட்டுமல்ல நான் கதைக்க முயற்சிப்பதை அவரே நிறுத்தியும்விட்டார். எனது கதையை நிறுத்தியவர் மாஸ்ரர் இஞ்ச பாருங்கோ இதை ஒருக்கால் ஐயாவிடம் கூறுங்கோ என கூறி நடந்த விடயத்தை அடியேனிடம் எடுத்துக் கூறினார்.

*19.12.2021* ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் *2.00* மணியை அண்மித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் இந்த உரையாடல் கனடாவில் ரொரன்றோ நகரில் இடம்பெற்றுக் கொண்டிருக் கிறது. அடியேனிடம் இதனை எடுத்துக் கூறியவர் சமூக செயற் பாட்டாளர் சாமி அப்பாத்துரை. சாமி அப்பாத்துரை அடியே னுடன் இவ்வாறுதான் அந்த விடயத்தை பகிர்ந்துகொண்டார்.

**"அங்கே ஒரு சிவலிங்கம் இருக்கிறது பாருங்கோ. சிவனுக்கு பூசையும் இடம்பெற்றுக் கொண்டிருக் கிறது போல் தெரிகிறது. பூசையை ஐயா வைக்க வில்லை. வயது குறைந்த ஒரு பையன்தான் வைக்கிறான். சிவலிங்கத்திற்கு அருகாமையில் ஐயா அமர்ந்திருக்கின்றார். அவர் ஒரு வாங்கிலில் தான் அமர்ந்திருக்கிறார். அதுவும் சற்று ஏலாதவ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராகத் தான் பார்க்கத் தெரிகிறது. அப்படி வாங்கி லில் இருந்தவாறு அங்கேயுள்ள சிலருடன் கதைத்துக் கொண்டிருக்கிறார்"**

இவ்வாறு நேற்றைய தினம் இதேநேரம் தான் கண்ட காட்சியை அடியேனிடம் கூறியவர் தொடர்ந்தும் தனது உணர்வு களை வெளிப்படுத்தினார். சந்நிதியான் தொடர்பாக நான் இவ்வாறு ஒரு நாளும் காணவில்லை. சிவலிங்கத்துடன் இணைந்து சந்நிதி தொடர்பாகத்தான் பார்க்கவுமில்லை. எனக்கு பார்க்க இது ஒரு புதிய காட்சியாகத் தெரிகிறது. அதனால் நேற்று நானே உடனே எடுத்து ஐயாவுக்கு இதனை சொல்லவேண்டு மென்று நினைத்தனான். நீங்கள் இப்ப ஒருக்கால் எடுத்து ஐயாவுக்கு இதனை சொல்லிவிடுங்கோ எனவும் பக்தியும் ஆர்வமும் நிறைந்த உணர்ச்சித் துடிப்புடன் சாமி அப்பாத்துரை இந்த விபரங்களை அடியேனிடம் வெளிப்படுத்தினார்.

இவ்வாறு கூறியபின் சாமி அப்பாத்துரையுடன் அடியேன் கதைக்க வேண்டிய விடயங்களை சுருக்கமாகக் கதைத்து எமது உரையாடலை நிறைவுசெய்து கொண்டோம். சாமி அப்பாத்துரை கேட்டுக் கொண்டதற்கிணங்க உடனடியாகவே கனடாவில் ரொரன்டோவில் அமைந்துள்ள சந்நிதியான் ஆலய பிரதம குருக்கள் பொன். புவனேந்திரன் ஐயாவுடன் அவருடைய தொலைபேசிக்கு தொடர்புகொண்டேன். ஐயாவே மறுமுனை யில் தொடர்புகொண்டு ஓம் மாஸ்ரர், வணக்கம்! சொல்லுங்கோ என கதைக்க ஆரம்பித்தார்.

அடியேன் அவருடன் கதையை மேலும் தொடராமல் அம்மா நிற்கின்றாவா என விசாரித்தேன். அதற்கு அவர் ஓம் மாஸ்ரர் அம்மா நிற்கிறார். மடப்பள்ளிக்குள் அலுவலாக நிற்கிறார் எனக் கூறினார். இதனை உள்வாங்கிய அடியேன் வழமைக்கு மாறாக அம்மாவுடன் தான் ஐயா கதைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டேன். தேவையில்லாது நான் இவ்வாறு கேட்கமாட்டேன் என்பதை புரிந்துகொண்ட ராசு ஐயா அம்மாவை அழைத்து அவரிடம் தொலைபேசியைக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா அடியேனுடன் கதைக்க ஆரம்பித்தார். மடப்பள்ளிக்குள் இருந்து வந்த அவரை தாமதப்படுத்தக்கூடாது என்பதனால் நேரடியாக அவரிடம் பின்வருமாறு வினாவினேன். அம்மா நேற்று இதேநேரம் நீங்கள் எங்கே இருந்தனீங்கள் என விசாரித்தேன். உண்மையில் இவ்வாறான ஒரு கேள்வியை அவர் சற்றும் எதிர்பார்த்திருக்கமாட்டார். இதனால் என்ன பதில் கூறுவதென சில விநாடிகள் தாமதிக்கவே செய்தார். அவர் எங்கே நின்றார் என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆனால் நான் ஏன் இப்படிக் கேட்கின்றேன். இதற்கு எப்படி பதில் சொல்வதென்ற தயக்கம் தான் அந்த தாமதத்திற்கு காரணம்.

இதனால் அடியேனே திரும்பவும் கதைத்தேன். இல்லை அம்மா யோசிக்காதீர்கள் இயல்பாக யோசியுங்கள் எனக் கூறினேன். உடனே அம்மாவும் ஓம் மாஸ்ரர் நேற்று இதேநேரம் பூசை முடிஞ்சு இங்கே கோயிலிலை தானே நின்றனாங்கள் என்பதை வெளிப்படுத்தினார். அத்துடன் நீங்களும்தானே மாஸ்ரர் நின்றனீங்கள் என இயல்பாகக் கதைத்தார். அதன்பின்பு அச்சொட்டாக அவரிடமிருந்து சரியான பதில் கிடைக்க வேண்டுமென்பதால் குறிப்பாக ஒன்று இரண்டு சிறிய வினாக்களை அவரிடம் சுட்டிக்காட்டி வினாவினேன். அப்பொழுது அவர் கூறிய பதில் இதுதான்.

“ஓம் மாஸ்ரர், பூசை நிறைவடைந்து நீங்களும் ஐயாவும் நானும் மூவரும்தானே கோயிலுக்குள் இருந்தனாங்கள். ஐயா அந்த வாங்கிலில் இருந்தவர். நீங்களும் நானும் ஐயா இருக்கிற அந்த வாங்கிலுக்கு பக்கத்திலைதான் அங்கே நின்றனாங்கள். அத்துடன் காலையில் செந்தூரன் ஐயா வெள்ளனவே வந்து அபிஷேகம் செய்துவிட்டு போனது பற்றி கதைத்தனாங்கள். செந்தூரன் ஐயா வெள்ளனவே வந்து தனது அபிஷேகச் செயற்பாடுகளை நிறைவாகச் செய்து வருகின்றமை நல்ல விடயம். அவர் தனது கடமைகளில் தவறுவதில்லை என்பது பற்றி எல்லாம் கதைத்தனாங்கள்” என நடந்தவற்றை அப்படியே வெளிப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்நாள் 18 ஆம் திகதி சனிக்கிழமை, அத்துடன் அது திருவெம்பாவை பூசை இடம்பெறும் காலமாகவும் இருந்தது. இதனால் காலையில் திருவெம்பாவை பூசை இடம்பெற்றது. மதிய நேரம் வழமைபோல சனி திருமுழுக்குப் பூசையும் இடம்பெற்றது. இந்த இரண்டு பூசைகளும் நிறைவாக இடம் பெறுவதற்கு வசதியாக அதிகாலையிலேயே புவனேந்திரன் ஐயாவுடைய புதல்வன் செந்தூரன் ஐயா ஆலயத்திற்கு வந்து எல்லா மூர்த்திகளுக்கும் அபிஷேகச் செயற்பாடுகளை செய்து விட்டு சென்றிருந்தார்.

இவ்வாறு முதல்நாள் 18ம் திகதி மதியநேரம் திருமுழுக்குப் பூசையும் நிறைவுபெற்ற பின்பு பிற்பகல் 2.00 மணியளவில் பிரதம பூசகர் புவனேந்திரம் ஐயா, அவரது துணைவியார், அடியேன் ஆகிய மூவரும் ஆலயத்திற்குள் இருந்தோம். புவனேந்திரம் ஐயா சிவலிங்கம் நந்தி ஆகிய மூர்த்திகள் இடம்பெற்றுள்ள இடத்திற்கு மிக அண்மையில் ஒரு வாங்கிலில் அமர்ந்திருக் கின்றார். அவர் சற்று சோர்வாகவும் உடல் நலக் குறைவுடனும் தான் அங்கே அமர்ந்திருக்கின்றார். அவருக்கு அருகில் ஐயா வின் துணைவியாரும் அடியேனும் அங்கேயிருந்து உரையாடிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அதிகாலையிலேயே வந்து அபிஷேகங்களை முடித்துவிட்டு சென்ற செந்தூரன் ஐயா பற்றியும் முக்கியமாக உரையாடினோம்.

இந்த உண்மைகளும் காட்சிகளும் கனடா ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்றவை. இதே உண்மைகளும் காட்சிகளும் சாமி அப்பாத்துரை கனடாவில் தனது அலுவலகத் தில் இருக்கும்பொழுது அவருக்கு அப்படியே வெளிப்பட் டுள்ளது.

இந்த உண்மைகளை எல்லாம் சாமி அப்பாத்துரை இப்பொழுது என்னுடன் உரையாடும்பொழுது தெரிவிக்கின்றார். இது பற்றி எங்கள் ராசு ஐயாவிடம் தெரிவிக்கும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார் என்பது பற்றி அம்மாவிடம் விபரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கூறினேன். பரவசமடைந்த அம்மாவின் வார்த்தைகள் தடுமாறியதை உணர முடிந்தது. சந்நிதியானின் திருவிளையாடல் ஒரு புறமும், சாமி அப்பாத்துரையின் ஆன்மிக பக்குவம் மறு புறமுமென அவரது உள்ளத்தில் ஆனந்தம் நிறைந்திருந்ததை அவரது வார்த்தைகளினூடாக அடியேனால் உணரமுடிந்தது.

தொடர்ந்து பிரதம பூசகர் பொன் புவனேந்திரம் ஐயாவிடம் சாமி அப்பாத்துரை கூறிய விடயங்களை அம்மாவும் கூறினார். அடியேனும் தொலைபேசியில் விபரமாக வெளிப்படுத்தினேன். ஐயாவின் பக்கத்தில் இருந்து வார்த்தைகள் வரவில்லை. சந்நிதி யானுடைய கருணையை, அவனது திருவிளையாடலைக் கேட்ட அவரால் பேசமுடியாது போனது.

அனைவருக்கும் தெரியும் ராசு ஐயாவுடன் கதைக்க ஆரம்பித்தால் அவர் எவ்வாறு அதைத் தொடர்கதையாக தொடரக்கூடிய இயல்புள்ளவர் என்பது. ஆனால் தற்பொழுது தானும் சம்பந்தப்பட்ட தமது ஆலயத்தில் நடந்த அந்த உண்மைகளும் காட்சிகளும் அப்படியே சாமி அப்பாத்துரைக்கு வெளிப்பட்ட அந்த நிதர்சனமான சந்நிதியானின் திருவிளை யாடல் அவரை அப்படியே கட்டிப்போட்டு விட்டது. அங்கே அவரால் கதையை தொடரமுடியவில்லை என்பதல்ல வாயைத் திறந்து அவரால் பேசவே முடியாதுபோனது.

இந்த நிகழ்வு இடம்பெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்பு தான் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் தற்பொழுது உள்ள புதிய இடத்திற்கு இடம்மாறியது. அவ்வாறு இடம் மாறிய பொழுது தான் சுற்றுச் சுவாமிகள் வரிசையில் சிவலிங்கமும் நந்தியும் இணைந்த புதிய சுற்றுச்சுவாமி சற்றுப் பெரிய உருவமுள்ள சிவலிங்கம் சந்நிதியில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த புதிய காட்சி கள் மட்டுமன்றி அங்கே நடந்துகொண்டிருந்த நிகழ்வுகளும் சாமி அப்பாத்துரைக்கு வெளிப்பட்டுள்ளது. சாமி அப்பாத்துரையிடம் சில விஷேடமான ஆன்மிக சக்திகள் இருப்பதை புவனேந்திரம் ஐயா ஏற்கனவே ஓரளவு அறிந்திருக்கின்றார். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது அவரது ஆலயத்தில் அவர் தொடர்பான விடயங் களை சாமி அப்பாத்துரை அச்சொட்டாக அப்படியே வெளிப் படுத்திய அற்புதம் இங்கே அரங்கேறியுள்ளது.

ஆழமான ஆன்மிக ஈடுபாடு உள்ளவர்களுக்கு ஆன்மிக சக்தியும் ஆன்மிக பலமும் எப்பொழுதும் இலைமறை காய் போல வெளிப்பட்டும் வெளிப்படாமலும் இருந்துகொண்டே வருகிறது. இவை காலம் காலமாக நாம் அறிந்து வருகின்ற உண்மைகள். இங்கே ஆன்மிக சக்தி ஒன்று செயற்படுவது எவ்வளவு நிதர்சனமான உண்மை என்பதை எமக்கு முன்னால் வாழ்ந்து கொண்டிருக்கும் சாமி அப்பாத்துரை போன்றவர்கள் தற்பொழு தும் எமக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இவற்றை உணர்ந்துகொள்கின்ற வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை.


*ஓம் முருகா!*


## நிம்மதி

சந்நிதியில் எப்பொழுதும் புதுப்புது மனிதர்கள் காணப்படுவார்கள். வெவ்வேறு காரணங்களுடன் வெவ்வேறு கோலத்துடன் அங்கே காணப்படுவர். தற்பொழுது பல புதிய சாமியார்களும் புதிய மனிதர்களும் உலாவுகின்றனர். இவர்களில் சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞரும் ஒருவர். அவருடைய சொந்த இடம் நெடுந்தீவு. அவருடைய குடும்பத்தினர் அனைவரும் கிறிஸ்தவர்கள். அவரது பரம்பரையினரும் கிறிஸ்தவர்கள். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் ஊழியராக இவர் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். வாரத்தில் ஐந்து நாட்கள் முழுமையாக வைத்தியசாலை யில் கடமையாற்றுகிறார். இரண்டு நாட்கள் முழுமையாக சந்நிதியில் தங்கியிருப்பதையும் வழமையாகக் கொண்டுள்ளார். வீட்டிற்கு செலவுக்கு பணம் அனுப்பினாலும் தனது வீடாக சந்நிதியானது சந்நிதானத்தையே கருதுவதாகவும் அடியேனிடம் தெரிவிக்கின்றார். சந்நிதிக்கு வந்து சந்நிதியில் தங்கியிருப்பதில்தான் தனது வாழ்வு நிம்மதியும் நிறைவும் அடைவதாகக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொன். புவனேந்திரன் ஐயர்


ஐயா. அம்மாவுடன் நூலாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புதம் - 07

எமது மூதாதையர்கள் சமய வாழ்வை மட்டுமன்றி சமூக வாழ்வையும் அன்பையும் அறணையும் அடிப்படையாகக் கொண்ட வாழ்வாக வாழ்ந்துவந்தனர். இந்த வாழ்வு அவர்களு க்கு எல்லா வகைகளிலும் நிறைவைத் தந்தது. அன்பையும் அறணையும் அடிப்படையாகக் கொண்ட வாழ்வியல் முறை இன்று சமுகத்தில் அருகிவருகிறது. இதனால்தான் பிரச்சனை களும் உருவாகின்றன. எமது அன்றாட வாழ்வும் நிம்மதியற்ற தாகச் சென்று கொண்டிருக்கிறது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தை செயற்படுத்தி வருகின்ற மருதர் கதிர்காமர் பரம்பரை யினர், சந்நிதியானை வழிபட வருகின்ற மெய்யடியவர்கள் என சந்நிதிச் சூழல் எப்பொழுதும் அன்பும் அறனும் நிறைந்த சிந்தனை, செயற்பாடுகள் நிறைந்த இடமாக இருந்துவருகிறது. அதேநேரம் தெய்வ காரியங்களைக் கூட மனித நிலையில் நின்று செயற்படுத்துகின்ற பாரம்பரியம் இங்கே பின்பற்றப்பட்டுவருகிறது. எதை செய்யும் பொழுதும் அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார், அவர் பார்த்துக் கொள்வார்... அவர் இருக்கிறார்... என்ற சொற் பதங்களை பூசகர்களும் பயன்படுத்துகின்றனர், தொண்டர்களும் பயன்படுத்துகின்றனர், அடியவர்களும் பயன்படுத்துகின்றனர்.

சந்நிதி முருகனுடனான மனித நிலைப்பட்ட இவ்வாறான உறவு எவ்வளவு உயிரோட்டமானது, அவ்வாறான வாழ்க்கை எவ்வளவு நிறைவைத் தருகின்றது என்பவற்றை வெளிப்படுத்து கின்ற நிகழ்வுகள் இங்கே வெளிப்படையாகவே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பூசகர்களுடன் தொடர்புபட்ட அவ்வாறான நிகழ்வுகளின் தார்ப்பரியங்களை இங்கே வாசகர்களுக்கும் வெளிப்படுத்துகின்றோம். சந்நிதியில் நித்திய பூசைச் செயற்பாடு களை மேற்கொள்வதென்பது இலகுவான விடயமல்ல. தினமும் 65 ஆலம் இலைகளில் அமுது படைப்பது உட்பட அனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விடயங்களையும் முறைப்படி நிறைவேற்ற வேண்டும். சந்நிதியில் பூசைச் செயற்பாடுகள் என்பது நிறைய ஆள் அணியினரை உள்வாங்கி நிறைய செலவுகள் செய்து ஒப்பேற்ற வேண்டிய செயற்பாடு. அத்துடன் இது அவர்களது வழமையான செயற்பாடு. அசாதாரண சூழ்நிலைகளில் அடியவர்கள் வரவு திடீரென குறைந்துவிட்டால் அன்றைய தினப் பூசை உரிமையாளருக்கு பெரிய பொருள் நஷ்டமும் ஏற்படுவதுண்டு. அதிகமாக எல்லா பூசகர்களுக்கும் கடந்த காலங்களில் இவ்வாறான கசப்பான அனுபவங்கள் நிறையவே ஏற்பட்டுள்ளன. நித்திய பூசைச் செயற்பாடுடகளுடன் நித்திய அன்னதானச் செயற்பாடுகளும் ஆலயத்தில் இடம்பெற்றுவருவதால் ஆளணியினர் தேவையும் பொருட் செலவுகளும் மேலும் உயர்வானதாகக் காணப்படு கிறது.

இவ்வாறான கஷ்டங்கள், நஷ்டங்களை எல்லாம் பூசகர்கள் மற்ற மனிதர்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை. மாறாக அவற்றை நேரடியாக சந்நிதியானுடனேயே பகிர்ந்துகொள்கின்றனர். அடியவர்கள் எதிர்பாராத வகையில் அதிகளவில் வரும் பொழுது வருமானமும் அதிகமாகக் கிடைப்பதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் நேரடியாகவே சந்நிதியானிடம் தமது மகிழ்ச்சியையும் நிறைவையும் தெரிவித்து நிறைவடைவார்கள். இதற்கு மாறாக தாம் செலவு செய்த தொகையை விட குறைவான வருமானம் கிடைக்கும் பொழுது அதுவும் தொடராக இழப்பு ஏற்படும்பொழுது ஏன் எங்களை சோதிக்கின்றாய்... உனக்குத்தானே தொண்டுகள் செய்கின்றோம் என சந்நிதியானிடம் நேரடியாகவே நியாயம் கேட்பார்கள்.


ஏனைய ஆலயங்களில் பூசைச் செயற்பாடுகளை மேற்கொள்ளுகின்ற ஆலயக் குருக்கள், மற்றும் உதவிக் குருக்கள் மாருடைய கொடுப்பனவுகளுக்கு ஏதோ ஒரு வகையான ஒழுங்கு இருக்கும். ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் அதிகமாக ஆலயப் பூசைக்கான உரிமை தினம் தினம் வெவ்வேறு நபர்களுக்கு மாறிக் கொண்டிருக்கும். அன்றைய தினத்திற்குரிய உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாந்தரூபசர்மா குடும்பத்தினர்




சபாரத்தினம் பாக்கியரத்தினம் தம்பதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியில் நித்திய அன்னதானம்



அன்னதானக் கந்தனாக மட்டுமன்றி
அபிஷேகக் கந்தனாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர்தான் சந்நிதியானுக்கு அன்றை நாளுக்குரிய பூசையைச் செய்வார். அது மட்டுமன்றி அன்றைய ஆலய வரவு, செலவு அனைத்துக்கும் அவர்தான் உரிமையும் பொறுப்பும் உடையவர். இதனால் அன்றைய பூசைச் செயற்பாடு தொடர்பான பொருள் நட்ட லாபம் அனைத்துக்கும் அன்றைய தினப் பூசை உரிமையாளர் தான் முழுப் பொறுப்பாளர்.

இவை தொடர்பாக அந்த பூசகரிடம் கேட்டால் அவர் ஒருபோதும் தான் பொறுப்பு எனக் கூறமாட்டார். எல்லாவற்றிற்கும் சந்நிதியான்தான் பொறுப்பு எனக் கூறுவதை நாம் பார்க்க முடியும். மூலஸ்தானத்தில் வேல் வடிவில் வெளிப்படுகின்ற சந்நிதியானை மனித நிலையில் வைத்து அவரை மனிதனாகப் பாவனை செய்து தமது காரியங்கள் அனைத்தையும் நகர்த்தி செல்கின்றனர்.

இவை தொடர்பாக அண்மையில் அடியேன் நேரடியாக உற்றுநோக்கி, உள்வாங்கிய ஒரு தினப்பூசை தொடர்பாக இடம் பெற்ற இவ்விடயங்களை அடியவர்களுக்கும் வெளிப்படுத்து கின்றோம். **29.04.2022** சின்ன ஆறுமுகசாமி ஐயருக்குரிய தினப் பூசை. அன்று மதிய பூசையில் அடியேனது மகளுடைய அபிஷேகச் செயற்பாடும் இருந்தது. அதற்குரிய பணத்தினை ஒரு சில நாட்களுக்கு முன்பு வழங்கியிருந்தார். அன்று ஆலயத்தில் அன்னதானம் வழங்குவதற்கு எவரும் உபயம் எடுக்கவில்லை. அன்று ஒரு வெள்ளிக்கிழமை. அதனால் ஆலயத்தில் வழங்க வேண்டிய அன்னதானத்திற்கு பெருந்தொகைச் செலவு ஏற்படுவது இயல்பானதே. இதனால் தினப்பூசை உரிமையாளர் பொதி செய்யப்பட்ட பத்து சிறிய அரிசிப் பை அதாவது **100** கிலோ அரிச மற்றும் மரக்கறிகள் என தேவையான எல்லாவற்றையும் கொள்வனவு செய்து அன்னதானத்திற்குரிய முன் ஆயத்தங்கள் அனைத்தையும் நிறைவு செய்திருந்தார். அன்னதானத்திற்கு எவரும் உபயம் எடுக்கவில்லை என்ற விபரம் அடியேனது மகளுக்கும் ஓரளவு தெரிந்திருந்தது. அதனால் அவர் ஒரு குறிப்பிட்டளவு பணத்தை அதற்காக வழங்குவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேனிடம் கையளித்திருந்தார். அதனால் அதனை கையளிப்பதற்கு சின்ன ஆறுமுகசாமி ஐயர் வீட்டிற்கு **28.04.2022** வியாழக்கிழமை சென்றதால் அவர்களுடன் சிறிது நேரம் உரையாடுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

அப்பொழுது அந்த வெள்ளிக்கிழமை அன்னதானம் வழங்குவதற்கு தாம் எதிர்பாராத வகையில் ஒரு குடும்பம் முன்வந்திருப்பது பற்றிய தகவலை அடியேனுடன் மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொண்டனர். வெள்ளிக்கிழமை தினப்பூசை உரிமை இந்த குடும்பத்திற்கு பதினெட்டு மாதங்களுக்கு ஒரு முறைதான் வரும். இவ்வாறு 18 மாதம் காத்திருந்து இவர்களுக்கு கிடைத்த இந்த வெள்ளிக்கிழமை தினப்பூசை நாள் கூட பொருள் இழப்பில் முடிந்தால் அது ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் வருத்தமான விடயமாகத்தானே இருக்கமுடியும்.

ஆனால் இப்பொழுது ஒரு மெய்யடியவர் குடும்பம் அன்னதானம் வழங்க முன்வந்தது இவர்களுக்கு நிறைவைக் கொடுத்துள்ளது. இதனால் சந்நிதியான் எப்பொழுதும் தம்மைக் கைவிடமாட்டார் எனக் கூறி தமது நிறைவான உணர்வுகளை அடியேனுடன் பகிர்ந்து கொண்டனர். இந்த சின்ன ஆறுமுகசாமி ஐயர் மட்டுமல்ல சந்நிதியில் செயற்படுகின்ற எல்லா பூசகர்களும் நாளும்பொழுதும் இதுபோன்ற அனுபவங்களைத்தான் எதிர் கொண்டு வாழ்ந்து கொண்டு வருகின்றனர்.

இந்த உணர்வு பரிமாற்றங்களின் பொழுது சின்ன ஆறுமுக சாமி ஐயருடைய துணைவியாரும் அவர்களது இரண்டு புதல்வி களும் கூடவே இருந்தனர். இதுபோன்ற உணர்வுபூர்வமான உரையாடல்களின் பொழுது சின்ன ஆறுமுகசாமி ஐயருடைய துணைவியார் அரிதாகவே தனது உணர்வுகளை பகிர்ந்துகொள் வார். ஆனால் அன்று வழக்கத்திற்கு மாறாக உள்ளத்தில் வெளிப்பட்ட அந்த அற்புத நிகழ்வை அடியேனுக்கு எடுத்துக் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2016ஆம் ஆண்டும் இதுபோன்ற சந்நிதியானுடைய இவர்களது பூசைச் செயற்பாடு ஒன்று நிறைவுபெற்றுவிட்டது. சந்நிதியானுடைய பூசைச் செயற்பாடுகளுக்காக குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தில் பொருட்களை கொள்வனவு செய்திருந் தனர். அதற்குரிய பணத்தை அன்று அந்த வியாபார ஸ்தாபனத் திற்கு வழங்கவேண்டும். அதற்கு 5000 ரூபா அளவில் பற்றாக் குறையாக இருந்துள்ளது. இவ்வாறான இந்த ஆலய கணக்கு வழக்குகளுக்கு இந்த குடும்பத்தில் பொறுப்பானவர் இவர்களது கடைசிமகள்.*

*அது ஒரு காலைப்பொழுது. இவர்களது கடைசி மகள் வழமைபோல சந்நிதியானுடைய உதயப் பூசைக்கு வழங்குகின்ற பூக்களுடன் ஆலயத்திற்கு சென்றுள்ளார். கூடவே அன்று மகளுடன் இந்த அம்மையாரும் ஆலயத்திற்கு சென்றுள்ளார். மலர்களை பூசைக்கு வழங்கிவிட்டு தாயும் மகளும் உள் வீதி வலம் வந்து கொண்டிருந்துள்ளனர். அப்படி உள்வீதி வலம்வரும் பொழுது அங்கே ஒரு இடத்தில் காணப்பட்ட சிறு குப்பைகளை யும் துப்பரவு செய்யும் செயற்பாட்டையும் மேற்கொண்டுள்ளனர். சந்நிதியானுடைய இவ்வாறான காரியங்களை எல்லாம் தமது பிறப்பின் கடமையாகவும் தொண்டாகவும் செய்துகொண்டிருந் தாலும் கடைசி மகளுடைய உள்ளத்தில் இன்று கடைக்கு கடனைத் தீர்ப்பதற்கு 5000/- பற்றாக்குறையாக இருக்கின்றதே என்ற மனக்குறை சற்று ஆழமாக அவரது உள்ளத்தை வாட்டிக் கொண்டே இருந்துள்ளது.*

*அந்த சந்தர்ப்பத்தில் அந்த கவலையை அவரால் கட்டுப் படுத்த முடியாததால்போலும் தனது மன ஆறுதலுக்காக தனது உணர்வை தாயாருடன் பின்வருமாறு பகிர்ந்து கொண்டுள்ளார்.*

*ஆனாலும் **இந்த ஆள் ஒரு நன்றி கெட்ட ஆள்தான் அம்மா...** என சந்நிதியானைப் பற்றி உரிமையுடன் சற்று குறையாக தனது உள்ளத்து உணர்வினை தாயாருடன் பகிர்ந்து கொண்டுள்ளார். தாயார் மகளிடம் **அப்படியெல்லாம் நீ கூறக்கூடாதம்மா. அவர் சரியான ஆள்தான். எங்களுக்குத்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தான் ஏதோ கஷ்ட காலமாக இருக்கிறது** எனக் கூறி மகளை ஆறுதல்படுத்தியுள்ளார்.

இதனை தாயார் கூறி வாய் மூடவும் மகளுடைய அலை பேசிக்கு ஒரு அழைப்பு வருகிறது. அழைப்பை எடுத்தவர் வீட்டில் உள்ள இவருடைய மூத்த சகோதரி. 10,000/- பணம் தந்துவிட்டு செல்கின்றார்கள் என அறிவிக்கின்றார்... கனடாவிலிருந்து நாகேந்திர ஐயர் அனுப்பிய பணம் எனக்கூறி சசி ஐயா இங்கே வீட்டிற்கு வந்து இப்பொழுதுதான் இந்த பணத்தை கையளித்து விட்டுச் செல்கிறார் என்ற விபரங்களையும் மூத்த சகோதரி இளைய சகோதரிக்கு விபரமாகத் தெரிவிக்கின்றார்.

உடனடியாகவே இளைய சகோதரி வீட்டிற்கு சென்று பணத்தைப் பெற்றுவந்து சந்நிதியானுடைய தினப் பூசைக்காகப் பெற்ற கடனை முழுமையாக அடைக்கின்றார்.

சின்ன ஆறுமுகசாமி ஐயருடைய துணைவியார் தனது உள்ளத்திலிருந்து வந்த அழுகையையும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு சந்நிதியானுடைய இந்த திருவிளையாடலை அடியேனுக்கு தெரிவித்தார்.

சந்நிதியானுடைய இதுபோன்ற மனித நிலைப்பட்ட செயற்பாடுகள் நிறைந்த சூழல்தான் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆயலம்.

சந்நிதியானிடம் வாருங்கள். அவனுடைய திருவருளைப் பெற்றுச் செல்லுங்கள்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புதம் - 08

***சந்நிதி முருகன் அப்படி கேட்பவற்றை எல்லாம் எல்லோருக்கும் கொடுக்கின்ற முருகனா?...*** இவ்வாறான வினா ஒருவரால் எழுப்பப்படுகிறது என்றால் இது ஒரு சராசரி வினாவாகவோ, சாதாரண சூழலில் எழுப்பப்பட்ட வினாவாகவோ இருக்காது என்பதனை வாசகர்கள் ஓரளவேனும் உணர்ந்து கொள்ள முடியும்.

தமது தேவை ஒரு சிக்கலான தேவை இது நிறைவேறுமா? யாரால் இதனை நிறைவேற்ற முடியும், எப்படி இதனை நிறைவேற்ற முடியும் என பல வருடங்களாக தினம் தினம் கவலையுடனும் குழப்பங்களுடனும் வாழ்ந்துகொண்டு வருகின்ற அந்த குடும்பப் பெண்ணினால்தான் இந்த வினா எழுப்பப்படுகிறது.

இதுபோன்று சந்நிதி முருகனை இவன் அவன் என்று மட்டுமல்ல அதற்கு அப்பாலும் சென்று ஒருமையிலும் உரிமையுடனும் திட்டித் தீர்க்கின்ற ஒருவர் என்றால் அது சந்நிதியில் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கின்ற மூத்த பூசகர் சின்ன ஆறுமுகசாமி ஐயர் ஒருவர்தான். சந்நிதியானது ஆழமான திருவருளையும் அடியவர்களது குறைகளைப் போக்குவதற்கு அவர் நடாத்துகின்ற திருவிளையாடல்களையும் மிகத் தெளிவாக உணர்ந்து வைத்திருப்பவர் ஆறுமுகசாமி ஐயர். ஆனால் நெருங்கியவர்களுடன் உரையாடும்பொழுது அவர் அவற்றை எல்லாம் வெளிப்படுத்தாது சந்நிதியான் மீது குறை குற்றங்கள் காட்டித்தான் கதைக்கும் இயல்புள்ளவர். ஆனால் தனது வீட்டிற்கு முதல் தடவையாக இந்தக் குடும்பத்தினர் வருகை தந்திருக்கின்றனர். அதுவும் அன்புப் பரிமாற்றத்திற்காக வருகை தந்துள்ள அந்த பிராமண குடும்பத்தினருக்கு அவர் சந்நிதியானது கருணை நிறைந்த அந்த அற்புதங்களைப் பற்றிய கதைகளையே வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

தாயினும் இனிமையான, தாயிலும் கருணை நிறைந்த கடவுள் சந்நிதியான் என்பது பற்றிய பல சம்பவங்களை ஆறுமுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி ஐயர் கூறிக்கொண்டிருக்கின்றார். அப்பொழுதுதான் அடக்க முடியாத அவாவினால் அந்த அம்மையார் **“சந்நிதி முருகன் அப்படி கேட்பவற்றை எல்லாம் எல்லோருக்கும் கொடுக்கின்ற முருகனா?** என்ற வினாவை ஆறுமுகசாமி ஐயரை நோக்கி மிகவும் ஆதங்கத்துடன் எழுப்புகின்றார்.

இந்த வினாவினை தொடர்ந்து வந்த தருணங்கள் அங்கே அப்பொழுது உருக்கமான தருணங்களாக மாறுகின்றன. பல வருடங்களாக பல வகையிலும் அந்த குடும்பத்தை வாட்டிக் கொண்டிருந்த மனக்குறை இப்பொழுது அந்த குடும்பத் தலைவியின் உள்ளத்திலிருந்து முழுமையாக வெளிப்படு கின்றது. அவ்வாறு வெளிப்படும் பொழுது பொங்கிவரும் அவரது அழுகையை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. தனக்கு இருக்கின்ற அந்தக் குறையும் நீங்கி தாமும் முழு நிறைவான குடும்ப வாழ்வை வாழ வழி பிறக்காதா என்ற ஏக்கம் அவருக்குள் நீண்டகாலமாக இருந்துவந்துள்ளது. அந்த ஏக்கம் அப்பொழுது அவருக்குள் அங்கே வெளிப்பட்டபொழுதுதான் அவரை அறியாமலே அந்த அம்மையார் கண்ணீர் சிந்தும் நிலைக்கு உருவானார்.

குடும்ப நட்பின் காரணமாக கணவன் மனைவியாக முதன் முறையாக இந்த இருவரும் ஆறுமுகசாமி ஐயர் வீட்டிற்கு வருகை தந்துள்ளனர். இது சின்ன ஆறுமுகசாமி ஐயர் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியான தருணமாக இருந்துள்ளது. இந்த சூழ்நிலையில் வீட்டிற்கு விருந்தினராக வந்துள்ள அந்த அம்மையார் கண்ணீர் சிந்தியது அனைவரது உள்ளத்தையும் நெகிழ வைத்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில்தான் “ஏன் அம்மா உனக்கு என்ன குறை, ஏன் கண்ணீர் சிந்தி அழுகின்றாய் என அந்த இளம் குடும்பத் தலைவியிடம் சின்ன. ஆறுமுகசாமி ஐயர் தனது இயல்பான பாணியில் அக்கறையுடன் வினாவுகின்றார். அப்பொழுதுதான் பிராமண குடும்பத்தை சேர்ந்த அந்த பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை வாட்டிக்கொண்டிருக்கும் தமது மனக்குறையை வெளிப் படுத்துகின்றார்.

எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றனர். ஆனால் எமது குடும்பத் தொழிலை தொடர்வதற்கு ஒரு ஆண் குழந்தை அவசியம். இதனால் எமது மொத்த குடும்பமுமே ஓர் ஆண் குழந்தைக்காக நீண்ட காலமாக ஏங்கிக் கொண்டிருக்கின் றோம். மேலும் மூன்றாவது குழந்தை என ஒரு குழந்தை எமது குடும்பத்திற்கு வந்தால் அது ஆண் குழந்தையாக மட்டும்தான் இருக்கவேண்டும். நடைமுறையில் இவ்வாறான எமது விருப்பம் நடந்தேற முடியுமா? இது எல்லாம் சாத்தியமாகுமா? எமது இந்த குறையை போக்குமாறு நாம் யாரிடம் கேட்கமுடியும் என கண்ணீர் சிந்தியவாறு தனது குறையை அந்த அம்மையார் ஆறுமுகசாமி ஐயரிடம் விபரமாக எடுத்துக்கூறினார்.

இவற்றை எல்லாம் ஆறுமுகசாமி ஐயர் மிக கவனமாக உள்வாங்கிக் கொண்டிருந்தார். கவலைப்படாதீர்கள் என அந்த அம்மையாரை முதலில் ஆறுதல்படுத்தினார். தொடர்ந்து அவர் கூறிய அந்த அருள்வாக்குதான் அங்கே உள்ளவர்கள் எவரும் எதிர்பார்க்காத, ஆனால் அனைவருக்கும் மன நிறைவைத் தருகின்ற வாக்காக அமைந்திருந்தது.

**"சந்நிதியானது அடுத்த உற்சவத்திற்கு முன்பு நீங்கள் ஆண் மகவுடன் இந்த ஆலயத்திற்கு வருவீர்கள்"**

சின்ன ஆறுமுகசாமி ஐயர் சிறு வயதிலிருந்தே தனது பிறப்பின் கடமையை உணர்ந்து எல்லா வகையான தொண்டுகளையும் சந்நிதியானுக்கு மேற்கொண்டு வந்த ஒரு நீண்ட கால அனுபவம் நிறைந்த பூசகர். தற்பொழுது அவர் பக்குவப்பட்ட சந்நிதியானது ஒரு மூத்த பூசகர். அந்த ஸ்தானத்திலிருந்து ஒரு அருளாளராக சந்நிதியானது அருள்வாக்காக அந்த அம்மையாருக்கு அந்த அருள் வாக்கினை வழங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது இந்த அருள்வாக்கு அந்த அம்மையாரது ஆழ்மனதிலிருந்து வந்த துன்பத்தை தணிக்கின்ற வேத வாக்காக மாறுகிறது. அவ்வப்பொழுது தனது கணவனுடன் இணைந்து சந்நிதிக்கு வந்து சந்நிதி முருகனை வழிபட்டுச் செல்கின்ற ஒருவர்தான் இந்த அம்மையார். இப்பொழுது இந்த அம்மையார் தன்னை முழுமையாக சந்நிதியானுக்கு அடிமை யாக்குகின்ற அடியவராக ஆக்கிக் கொள்கின்றார். இனிமேல் எதிர்காலத்தில் தவறாது மாதத்தில் ஒருமுறையேனும் சந்நிதி யானிடம் வந்து வழிபட்டுச் செல்வேன் எனவும் உறுதி எடுக்கின்றார்.

அடுத்து வந்த மாதங்களிலேயே அந்த அம்மையார் முழுகாமல் இருக்கிறார். அந்த ஆனந்தத்துடன் தொடர்ந்து வந்த கந்தசஷ்டிக் காலத்தில் விரதம் அனுஷ்டித்து சந்நிதியா னிடம் வந்து நம்பிக்கையுடன் மனமுருகி வழிபட்டும் செல்கின் றார்.

இங்கே மூன்றாவது குழந்தை உருவாகியுள்ளது என்பது உண்மையானதுதான். ஆனால் அந்த குடும்பத்திற்கு அது முக்கியமானதல்ல. இந்த குழந்தை ஆண் மகவாக மட்டும் இருக்க வேண்டுமென்பதுதான் முக்கியமானது. இன்னும் வெளிப்படையாகச் சொல்லப்போனால் மூன்றாவது குழந்தையும் பெண் குழந்தையாக வந்துவிடக் கூடாதென்பதற்காக இனிமேல் குழந்தையே வேண்டாமென்பது பற்றியும் இந்தக் குடும்பத்தினர் சிந்தித்துள்ளனர்.

இதனால்தான் இந்த அம்மையார் கருத்தரித்திருந்தாலும் அவர்களுக்கு அது முழு நிறைவைத் தந்துவிடவில்லை. மாறாக அது அவர்களுக்கு ஒருவித ஏக்கத்தையே கொடுத்துக் கொண்டிருந்துள்ளது. அதேநேரம் அந்த அம்மையார் மனம் தளராது தவறாது மாதந்தோறும் சந்நிதியானிடம் வந்து சந்நிதியானை மனமுருகி வழிபடுகின்ற காரியத்தை முழு நிறை வாகவே தொடர்ந்து கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்கள் கடந்துகொண்டிருந்தன. மாதாந்த வைத்திய பரிசோதனையில் குழந்தை ஆரோக்கியமாக வளர்வதை வைத்தியர்கள் தவறாது உறுதிப்படுத்திக் கொண்டிருந்தனர். இது அவர்களுக்கு நிறைவான செய்தியாக அமைந்திருந்தது. அதே நேரம் இதற்கு சமாந்தரமாக இந்த குடும்பத்தினருக்கு இன்னொரு பக்கம் ஏக்கமும் பதட்டமும் அதிகரித்துக் கொண்டு செல்கின்ற சூழ்நிலைகளும் உருவாகியது.

நவீன வைத்திய வசதிகளின் உதவியுடன் குழந்தை ஆணா, பெண்ணா என ஒரு குறிப்பிட்ட மாதங்களின் பின் தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பது பற்றி நாம் அறிவோம். ஆனால் இது இவர்களுக்கு மட்டும் கைகொடுக்கவில்லை. எட்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் குழந்தையை சுற்றி நீர் கூடியளவு நிறைந்திருப்பதால் எவ்வளவு முயற்சி செய்தும் வைத்தியர்களால் என்ன குழந்தை என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை.

இப்பொழுது 9வது மாதம். ஒரு பெண் வைத்தியர் அந்த நல்ல செய்தியை இவர்களுக்கு தெரிவிக்கின்றார். இவர்கள் எதிர்பார்த்து காத்திருந்தது போலவே இவர்களுக்கு ஆண் வாரிசு ஒன்று வருவது உறுதியாகிறது. ஆனாலும் அந்த பெண் வைத்தியர் கூடவே ஒரு குண்டையும் தூக்கிப் போடுகின்றார். இந்த அம்மையாருக்கு சிசேரியன் மூலம்தான் பிரசவம் இடம்பெற முடியுமென்றும் கூறுகின்றார். இந்த அம்மையாருக்கு முதல் இரண்டு குழந்தைகளும் இயல்பான சுகப் பிரசவமாக பிறந்த நிலையில் இப்பொழுது 3வது குழந்தை சிசேரியன் பிரசவ மாக இடம்பெற வேண்டுமென்பது குடும்பத்தினரை கவலை யடையச் செய்கிறது.

இந்த கவலையுடன் இன்னொரு கவலையும் தொடராக இவர்களுக்கு ஏற்படுகிறது. குழந்தையைச் சுற்றி நீர் முட்டி நிற்பதால் குழந்தை நீர் குடித்து மூச்சு விடுவதில் பிரச்சனையை எதிர்நோக்கும் ஆபத்து இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஏற்கனவே செப்டம்பர் மாதத்தில் பிரசவத்திற்கு திகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டிருந்தனர். ஆனால் தற்பொழுது ஒரு மாதம் முந்தி ஓகஸ்ட் மாதமே பிரசவத்தை மேற்கொள்ள வேண்டுமெனக் கூறி ஓகஸ்ட் மாதத்தில் திகதி குறிக்கப்படுகிறது.

ஓகஸ்ட் மாதம் குறித்த திகதியில் இவருக்கும் இன்னொரு பெண்ணுக்கும் திகதி குறிக்கப்படுகிறது. குறித்த நாளும் வந்து விட்டது. இதற்கிணங்க இவருடன் சேர்த்து நாள் குறிக்கப்பட்ட அடுத்த பெண்ணுக்கு சிசேரியன் மூலம் பிரசவம் இடம்பெறு கிறது. தொடர்ந்து இந்த அம்மையாரை சத்திரசிகிக்சை அறைக்கு எடுக்கவேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. மூன்று நான்கு மணித்தியாலங்களாக இவர் தொடர்ந்து பிரசவ சத்திர சிகிச்சைக்காக காத்திருக்கிறார். பசி மயக்கமும் ஏற்படுகிறது. நிறைவாக விபத்தில் சிக்கிய இருவருக்கு அவசர மாக சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்பட்டுக் கொண்டிருந்ததால் தாமதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் சந்நிதி யானது ஆலயத்திற்கு சென்று கொண்டிருந்தவர்கள்தான் விபத்தில் சிக்கியிருந்த விபரமும் தெரியவருகிறது.

பி.பகல் நேரம் இந்த அம்மையாருக்கு சத்திர சிகிச்சை இடம்பெறுகிறது. ஆண் குழந்தை பிறக்கிறது. அதே நேரம் வைத்தியர்கள் எதிர்பார்த்ததும் இங்கே இடம்பெறுகிறது. குழந்தை நீர் குடித்து சுவாசிக்கச் சிரமப்பட்டதால் ஒக்சிசன் உதவியுடன் குழந்தை சுவாசிக்க வைக்கப்படுகிறது. இதனால் பிறந்த ஆண் குழந்தையை தாயும் மற்றவர்களும் உடனே பார்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுகிறது.

ஏறத்தாழ ஐந்து மணித்தியாலங்கள் கடந்த பின்புதான் குழந்தையை அந்த அம்மையாரிடம் வழங்குகின்றனர். தவமாய் தவமிருந்து பெற்றெடுத்த தனது ஆண் மகவை அந்த பிராமணத் தாய் தனது கரங்களால் பெற்றுக்கொள்கிறார். அந்த பொழுது தான் அவரது குடும்ப வாழ்வின் மறக்கமுடியாத தருணம், துன்பங்கள், வேதனைகள், ஏமாற்றங்கள், தவிப்புகள்... என இறுதிக்கணம் வரை சங்கிலித் தொடராக தொடர்ந்து கொண்டிருந்தன. இவை அனைத்தையுமே அந்த தாய் அந்தத் தருணத்தில் மறந்துவிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த தருணத்தில் தொடர ஆரம்பித்த மகிழ்ச்சி தற்பொழுது 3 வருடங்கள் கழிகின்ற நிலையிலும் அதேபோல அந்த ஒட்டுமொத்த குடும்பத்திலும் தொடர்ந்து கொண்டிருக் கிறது.

சின்ன ஆறுமுகசாமி ஐயர் வழங்கிய அருள்வாக்கு சாதாரண அருள்வாக்கு அல்ல. அது சந்நிதி முருகனால் சின்ன ஆறுமுகசாமி ஐயருக்கு ஊடாக வழங்கப்பட்ட அருள்வாக்கு. அதற்கு சோதனைகள் வரலாம். ஆனால் அது நிறைவேறுகின்ற அருள்வாக்கு.

ஆம் ஆறுமுகசாமி ஐயர் அளித்த அருள்வாக்குப்படி அடுத்த சந்நிதியானது 2019ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பு அவர் ஆண் குழந்தையைப் பிரசவிக்கின்றார்.

இந்த குருக்கள் குடும்பம் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தில் செயற்படும் விநாயகப் பெருமானுடைய ஆலயத்தின் பிரதம குருக்கள் குடும்பமான சாந்தரூப சர்மா சுவஸ்திகா குடும்பமாகும். சாந்தரூப சர்மா தனது 15 வயதுப் பருவத்திலிருந்து இன்றுவரை சந்நிதியானை ஒரு ஒழுங்கில் வந்து தரிசித்து செல்கின்ற மெய்யடியவரும் ஆவர். சந்நிதியானுக்குத் தாம் நேர்த்தி வைத்த தமது வாக்குப்படி தவறாது மாதந்தோறும் தமது ஆண்குழந்தை சகிதம் இந்தக் குடும்பத்தினர் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தி லிருந்து சந்நிதியானிடம் வந்து அவனை வழிபட்டுச் செல் கின்றனர்.

2022 மார்ச் மாதம் சந்நிதியானது சந்நிதானத்தில் அடியேன் இவர்களைச் சந்தித்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. ஆலய வாசலில் வெளிவீதியில் அமைதி யான மம்மல் நேரம் நடைபெற்ற மகிழ்வான உரையாடலாக இது இடம்பெற்றது. அப்பொழுது மேற்படி அனைத்து தகவல்களை யும் இந்த தம்பதிகள் மனமுருகி அடியேனிடம் வெளிப்படுத்தினர்.

எல்லாம் அவன் அருளாலே.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம் - 09

*17.02.2002* புதன்கிழமை. அது பௌர்ணமி தினத்திற்குரிய ஒரு பொது விடுமுறை நாள். விஷேட அபிஷேகச் செயற்பாடுகள் இடம்பெற்று மதிய பூசையும் *11.45* மணியளவில் நிறைவுபெற்று விட்டது. தற்பொழுது மதிய பூசை நிறைவுபெற்றதைத் தொடர்ந்து தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வழமைபோல அன்னதானச் செயற்பாடுகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அன்றைய தினப் பூசை உரிமையாளர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு உதவியாக ஆலய கருமபீடத்தில் அடியேனும் அவர்களுடன் இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றேன். நேரம் பிற்பகல் *2.00* மணியைத் தாண்டிவிட்டது. அன்று விடுமுறை தினம் ஆகையால் தூர இடங்களிலிருந்தும் குழுக்களாகவும் குடும்பங்களாகவும் பலவகைப்பட்ட அடியார்களும் காலதாமதமாகியும் வருகைதந்து கொண்டுதான் இருந்தனர். நேர்த்திச் செயற்பாடுகளை நிறைவேற்றுபவர்கள், அன்னதானச் செயற்பாடுகளுக்கான நிதி பங்களிப்பு போன்ற கருமங்களுக்காக வருபவர்கள் எமது கருமபீடத்திற்கு வந்து தமது தேவைகளை எம்மிடம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். நாமும் அவர்களது தேவைகளை நிறைவு செய்வதற்கான ஒழுங்குகளை செய்து கொண்டிருந்தோம். நேரம் *2.30* மணியை தாண்டிவிட்ட நிலையிலும் ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்டு பசியாற வருபவர்களுக்கும் உரிய ஒழுங்குகள் இடம் பெற்றுக்கொண்டுதான் இருந்தன.

இதுபோன்றுதான் இரு பெண்கள் ஆலய தரிசனத்தை நிறைவுசெய்துவிட்டு எமது கருமபீடம் நோக்கி வந்துகொண்டிருந்தனர். கருமபீடத்திற்கு வந்தவர்களிடம் சாப்பிட்டுவிட்டீர்களா என இயல்பாகக் கேட்டேன். நேரம் கடந்துவிட்டதை அவர்களும் உணர்ந்துகொண்டதால் போலும் சற்றுத் தயக்கத்துடன் சாப்பிடவில்லை என்பதை கூறினர். உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த அன்னதானச் செயற்பாடு நிறைவுபெற்றுவிட்டது. ஆனாலும் இவ்வாறு தாமதமாகியபின்பும் சிலர் பசியுடன் வருவார்கள் என்பதை எதிர்பார்த்து குறிப்பிட்டளவு சாதம், தளிசை, கறி என்பவற்றை கருமபீடத்திற்குள்ளேயே நாம் தயாராக வைத்திருந்தோம்.

தன்னை வழிபட வருபவர்களை அன்னதானக் கந்தனான சந்நிதியான் பசியுடன் அனுப்பமாட்டான் என்பதை அவர்களிடம் தெரிவித்து முதலில் அவர்களின் உள்ளத்தை ஆறுதல்படுத்தினோம். தொடர்ந்து அவர்கள் பசியாறுவதற்குரிய சாதம் கறி என்பவற்றுடன் பலகாரங்களையும் வழங்கி அங்கேயுள்ள மண்டபத்தில் பசியாறும்படி கேட்டுக்கொண்டோம்.

பசியாறிவிட்டுவந்த தாய் ஜெயராஜலோசினியும் மகள் வானிகாவும் கருமபீடத்தில் மீண்டும் எம்மை சந்தித்தனர். தாம் கொழும்பில் இருந்து வருவதாகவும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தரிசனத்தை முடித்துக்கொண்டு சந்நிதியானை வழிபட வந்திருப்பது பற்றிய விபரங்களையும் மனம்விட்டு எம்முடன் பகிர்ந்துகொண்டனர். அப்பொழுதுதான் மகள் வானிகா யாரும் இலகுவில் பகிர்ந்துகொள்ள விரும்பாத, பகிர்ந்துகொள்ள சங்கடப்படுகின்ற சந்நிதியான் தொடர்பான தனது அனுபவத்தை எம்முடன் பகிர்ந்துகொண்டார்.

சில வருடங்களுக்கு முன்பு இதேபோன்று சந்நிதியானை வழிபடுவதற்கு தாயும் மகளும் வருகைதந்துள்ளனர். சந்நிதியானை மனநிறைவுடன் வழிபட்டும் உள்ளனர். அப்பொழுது மதிய பூசை நிறைவடைந்து ஆலயத்தில் வழமைபோல அடியார்கள் அன்னதானம் அருந்திக் கொண்டு இருந்துள்ளனர். மகள் வானிகா கொழும்பில் கல்வி கற்று அங்கே வளர்ந்தவர். அப்பொழுதுதான் முதன்முறையாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு வந்திருப்பவர். தாயார் சந்நிதியில் இடம்பெறும் அன்னதானத்தின் மகிமையை உணர்ந்தவர். தாயார் இங்கே ஆலயத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அன்னதானச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டில் பங்குபற்றி பசியாறிச் செல்வோம் என மகளிடம் கூறியுள்ளார். தாயார் கேட்டுக்கொண்டதால் மகள் வானிகாவும் அதற்கு உடன்பட்டுள்ளார். அத்துடன் எல்லோரையும் போல பந்தியில் அமர்ந்திருந்து அன்னதானம் உண்பதற்கும் ஆயத்தமாகியுள்ளார். இவை எல்லாம் வெளிப்படையாக அங்கே இடம்பெற்றுக்கொண்டிருந்த நிகழ்வுகள். ஆனால் வானிகாவின் உள்ளத்தில் எதிர்மறையான உணர்வுகள்தான் ஓடிக்கொண் டிருந்தன.

வானிகா சிறுவயதிலிருந்தே கொழும்பில் கல்விகற்று கொழும்பில் வளர்ந்து கொழும்பு வாழ்வியல் முறைக்கு பழக்கப் பட்டவர். விமானப் பயணிகள் பணிப்பெண்ணாக தொழில்புரிந்து கொண்டிருப்பவர். அவ்வாறான பின்னணிகளுக்கு பழக்கப்பட்ட வானிகாவுக்கு சந்நிதியில் இடம்பெற்றுக் கொண்டிருந்த அந்த அன்னதானச் செயற்பாட்டில் நிறைவு ஏற்படவில்லை. அன்னதானம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த மடப்பள்ளியுடன் இணைந்துள்ள பூங்காவன மண்டபம் மாபிள் பதிக்கப்பட்ட தளத்தை கொண்டதுதான். ஆனாலும் இதற்கு முந்திய பந்தியில் பறிமாறப்பட்ட சாதம் கறி என்பன ஆங்காங்கே நிலத்தில் சிந்தப்பட்டிருப்பது, அங்கே அமர்ந்து உணவை உண்பவர்கள் சிலர் அழுக்கான ஆடைகள் அணிந்திருப்பது, சாதம், கறி என்பன ஒரு சீரான ஒழுங்கில் பரிமாறப்படாத தன்மைகள் போன்ற அப்பொழுது காணப்பட்ட சிறிய விடயங்கள் எல்லாம் வானிகாவுக்கு சங்கடங்களை ஏற்படுத்துவதாக அமைந்திருந் துள்ளன. அது மட்டுமல்ல அவர் தான் ஆலயத்தில் இருப்பதை யும் மறந்து உணவு அருந்திக் கொண்டிருந்த அந்த சூழலை ஒரு அருவருப்பான சூழலாக சிந்திக்கத் தலைப்பட்டுள்ளார்.

தாம் ஒரு அருவருப்பான சூழலில் இருப்பதாகவும் அங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அன்னதானச் செயற்பாட்டையே ஒரு அருவருப்பான விடயம் போல வானிகா சிந்தித்துள்ளார். இவ்வாறான உணர்வுகள் உள்ளத்தில் ஏற்படும்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாக குமட்டுவது போன்ற செயற்பாடு தோன்றுவது இயல் பானதே. வானிகாவுக்கு குமட்டுவது போன்ற ஒரு உணர்வு மெதுவாக ஏற்பட்டுள்ளது.

பல இலட்சம் அடியார்கள் பசியாறிச் செல்லுகின்ற இடம் சந்நிதி. இங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அன்னதானச் செயற்பாடுகளுக்குள் எவ்வளவு புனிதமான விடயங்கள் உள்ளடங்கியுள்ளன என்பதை சந்நிதியுடன் தொடர்பில்லாத இளம் வயதுடைய வானிகா அறிந்திருப்பதற்கு வாய்ப்பு இல்லை.

சந்நிதி ஆலயத்திலோ அல்லது அன்னதான மடங் களிலோ வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் அன்னதான செயற் பாட்டிற்காக வழங்கப்படும் பொருள் பண்டங்களையோ அல்லது நிதி பங்களிப்புக்களையோ செய்பவர்களது உள்ளத்து உணர்வுகள் தூய்மையானவை. அன்னதானத்திற்கான நோக்கங் களும் செயற்பாடுகளும் மிகவும் புனிதமானவை என்பதை அதில் நேரடியாக சம்மந்தப்படுபவர்கள் மிக நன்றாகவே உணர்ந் துள்ளனர். இதேபோன்று ஆலயத்தில் அன்றைய தினப் பூசைக்கு உரிமையாளராக உள்ள மருதர் கதிர்காமர் மரபில் வந்த பூசகர்களது சிந்தனையும் செயற்பாடுகளும் புனிதமானவை. தினமும் 65 ஆலம் இலைகளில் சந்நிதியானுக்கு அமுது படைத்து பூசை செய்கின்ற பூசகர்கள் பூசை நிறைவுபெற்ற பின் தினமும் அங்கே வழிபடவந்துள்ள அடியார்களது பசியினை போக்குகின்ற அன்னதானச் செயற்பாட்டையும் மேற்கொள்வ தென்பது சாதாரணமான விடயமல்ல. இவ்வாறான அன்ன தானச் செயற்பாட்டிற்கான சாதம் கறி என்பவை எல்லாம் ஆலய மடப்பள்ளிக்குள்ளேயே தயாரிக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களில் சிலருக்கு சிறியளவு கொடுப்பனவு வழங்கப்பட்டாலும் அனைவரும் சந்நிதியானுக்கு தொண்டு செய்கின்றோம் என்ற தூய சிந்தனையுடன் தூய்மை யாகவே செயற்படுவதையும் நாம் பார்க்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு எல்லா வகையிலும் புனிதமும் தூய்மையும் நிறைந்தது தான் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்று வரும் அன்னதானச் செயற்பாடு. இவை பற்றி எல்லாம் வானிகா அறிந்திருப்பதற்கு வாய்ப்பு இல்லை. இவை பற்றி அவர் சிந்தித்திருக்கவும் மாட்டார். வானிகா அப்பொழுது அந்த நேரத்தில் அவதானித்த சில காட்சிகளினூடாக புனிதமான அன்னதானச் செயற்பாட்டை ஒரு அருவருப்பான விடயமாக சிந்திக்கத் தலைப்பட்டுள்ளார்.

வானிகா வேண்டுமென்றே இவ்வாறான தவறான சிந்தனையை மேற்கொள்ளவில்லை என்பது உண்மையாக இருக்கலாம். இருந்தபோதும் சந்நிதியான் இதனை பார்த்துக் கொண்டிருப்பானா? இங்கே இடம்பெறும் அன்னதானச் செயற்பாடு புனிதமானது என்பதை அவரை உணரச் செய்ய வேண்டாமா? இதனால் சந்நிதியான் வானிகாவுக்கு பாடம் புகட்ட திருவுள்ளம் கொண்டான்.

வானிகா சந்நிதியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அன்னதானத்தை ஒரு அருவருப்பான நிகழ்வாக நோக்கினார். ஆனால் இப்பொழுது வானிகா சந்நிதியில் இடம்பெறும் அன்னதானச் செயற்பாடு அருவருப்பானதல்ல, அங்கே பந்தியில் அமர்ந்திருந்து பசியாறிக் கொண்டிருப்பவர்களும் அருவருப்பான வர்கள் அல்ல, அங்கே பரிமாறிக் கொண்டிருப்பவர்களும் அருவருப்பானவர்கள் அல்ல என்ற உண்மையின் யதார்த்தத்தை உணர்ந்து கொள்கின்றார். இவை எல்லாமே இயல்பானவை என்பதை மிகத்தெளிவாக உணருகின்றார். மாறாக தான்தான் அருவருப்பானவர் என்பதை உணரும் நிலை அங்கே உருவாகியது.

சந்நிதியில் நடந்து கொண்டிருந்த அன்னதானச் செயற்பாட்டையும் அந்த சூழலையும் அருவருப்பானதாக நினைத்த அந்த பொழுதிலேயே அந்த இடத்திலேயே வானிகா தான் அருவருப்புக்குரிய ஒருவர் என்பதை அவரே ஐயம் திரிபுற உணர்ந்து கொள்கின்ற படிப்பினை ஒன்று அவருக்கு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானிகாவுக்கு அன்னதானம் தொடர்பான அவரது அருவருப்பான சிந்தனையால் அவருக்கு குமட்டல் உணர்வுதான் ஏற்பட்டது. ஆனால் சந்நிதியான் அவருக்கு ஏற்படுத்திய படிப்பினை அவரை அங்கே நிலைகுலையச் செய்தது. அந்த அன்னதான மண்டபத்திலிருந்தே அவரை எழுந்து ஓடச் செய்தது.

சாதத்தை அருந்த ஆரம்பித்தபொழுது அன்னதானச் செயற்பாடு தொடர்பாக எதிர்மறையான உணர்வுகள் அவரது உள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்தது. ஆனாலும் எல்லோரையும் போல தாயாருக்கு அருகில் இருந்து அன்னத்தை அருந்தி முடித்துள்ளார். அன்னத்தை அருந்தி முடித்த நிலையில் இயல்பாக இருந்த அவரது உடலில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. வழமையாக இயல்பாக இருக்கின்ற அவரது வயிற்றில் குழப்பம் ஏற்படுகிறது. உடனடியாகவே அந்த இடத்தைவிட்டு அந்த இடத்தில் இருப்பவர்களைவிட்டு விலகிச் செல்லாவிட்டால் விபரீதம் ஏற்பட்டுவிடும் என்பதை உணருகின்றார். எல்லோர் முன்னிலையிலும் அவமானப்பட்டு அருவருப்புக்கு உள்ளாகும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டு விடுவோம் என்பதை அவரது செயற்பாடு வெளிப்படுத்துகிறது.

சற்றுமுன்பு தான் மட்டும் உயர்வாக நிறைவாக சுத்தமாக இருப்பவர் போல உணர்ந்தவர். தற்பொழுது தன்னைச் சுற்றியுள்ள சூழலும், தன்னை சுற்றியுள்ளவர்களும் இயல்பாக நிறைவாக இருக்கிறார்கள். தான் மட்டும் இயல்புக்கு மாறான வராக ஒருவகையில் அருவருக்கத்தக்கவராக இருப்பதை உணருகின்றார். அது மட்டுமன்றி அவசரமாக அந்த சூழலி லிருந்து வெளியேறுகின்றார். அவ்வாறு வெளியேறிய வானிகா இயற்கைக் கடன் கழிக்கின்ற இடத்தை அங்கே காணப்பட்டவர் களிடம் அவசரமாக விசாரித்து தெரிந்து கொள்கின்றார். இதேபோன்று அவசரமாகவே ஆலயத்தின் தெற்கு திசையில் உள்ள கழிவறைக்கு செல்லுகின்ற சூழல் அவருக்கு ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், சந்நிதியான் சந்நிதியில் வானிகா தான் கற்றுக் கொண்ட வாழ்க்கைப் பாடத்தை கருமபீடத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த அடியேனிடம் வினயமாக எடுத்துக்கூறினார். அதேநேரம் சந்நிதி முருகன் ஏழை எளியவர்களுக்கு காட்டுகின்ற கருணைக்கு எல்லையிட முடியாதென்பது பற்றி தான் உணர்ந்து கொண்டது பற்றி எல்லாம் ஒரு குறுகிய நேர இடைவெளிக்குள் வானிகா அடியேனிடம் மிகத் தெளிவாகவும் வெளிப்படை யாகவும் வெளிப்படுத்தினார்.

இன்று வானிகா சந்நிதியானுடைய மெய்யடியவர். சந்நிதி யானது அன்னதானத்தின் மகிமையை நன்கு உணர்ந்து கொண்டவர். நேரம் இரண்டு மணியை தாண்டிய நிலையிலும் சந்நிதியானது அன்னதானத்தை அருந்தவேண்டுமென்ற பெருவிருப்பு அவருக்குள் இருந்துள்ளது. அந்த உள்ளுணர்வுடன் கருமபீடத்திற்கு தானாக நாடிவந்தார். அங்கே தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். நாமும் மிகத் தாராளமாக சாதம் கறி என்பவற்றையும் பலகாரங்களையும் நிறைவாக அவருக்கு வழங்கினோம்.

சந்நிதியில் வானிகாவுக்கு மட்டும் இது இடம்பெறவில்லை. நேர்மறையானதும் எதிர்மறையானதுமான இவ்வாறான அனுபவங்களை இங்கே தினம் தினம் அடியவர்கள் பெற்ற வண்ணமே உள்ளனர். இவ்வாறான அனுபவங்களுடன் வந்து வழிபடுகின்ற அடியவர்கள் நிறைந்த ஆலயம்தான் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்.

வானிகா வழமைபோல தற்பொழுதும் கட்டார் பயணிகள் விமானத்தில் பயணிகள் பணிப்பெண்ணாக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

அவருடைய நிழற்படம் சொந்த ஊர் போன்ற விபரங்களை இங்கே தவிர்த்துள்ளோம்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம் - 10

இன்றும் சமுகத்தில் மிகமுக்கிய அமைப்பாக குடும்பங்கள் இருந்துவருவதை தற்கால சமுகவியல் அறிஞர்களும் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றனர். எமது பாரம்பரிய சமய கலாசார மரபுகளில் எல்லாம் குடும்பம் என்ற அமைப்பிற்கு மிகக்கூடிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருவதையும் நாம் அனைவரும் நன்கு அறிவோம். அதிலும் எமது மூதாதையர்கள் கூட்டுக் குடும்பங்களாக வாழ்ந்து இப்பூவுலக வாழ்வை பூரணமான நிறைவுடன் நிறைவுசெய்த சிறப்பும் எமக்கு உண்டு.

இவ்வாறான பாரம்பரியத்தில் வந்ததினால் போலும் இன்றும் சில குடும்பங்களில் கணவன் மனைவி உறவு என்பது சராசரி கணவன் மனைவி உறவைவிட மிக இறுக்கமானதாக, மிக புனிதமானதாக, மிகவும் அன்னியோன்னியமானதாக விளங்கிவருவதைப் பார்த்து நாம் பெருமைப்படுகின்றோம். வியப்படைகின்றோம். கணவன் மனைவிக்கிடையேயான புனிதமான உறவு என்பது மானிட வாழ்வை உயிரோட்டமானதாக மட்டுமன்றி மகத்துவமானதாகவும் ஆக்கிவிடுகிறது. இவற்றுடன் இறையருளும் இணைகின்றபொழுது அது மானிட வாழ்வில் உச்சமான நிறைவை தருகின்ற விடயமாக ஆகிவிடுகிறது. மேலும் புராண இதிகாசங்களில் மட்டும் நடைபெற்றதாக நாம் கருதுகின்ற இவ்வாறான குடும்ப உறவு, குடும்பப் பிணைப்பு தொடர்பான அற்புத நிகழ்வுகள் தற்காலத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதற்கான ஓர் சாட்சியாக இத் தொடரை அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

1935ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்ட திரு. திருமதி சபாரத்தினம் பாக்கியரத்தினம் தம்பதியினர் தமது குடும்ப வாழ்வில் இணைந்தபின் தமது முதலாவது ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனது வருடாந்த மகோற்சவத்தை எதிர்நோக்கியிருந்த காலகட்டம் அது. திரு. சபாரத்தினம் அவர்கள் வல்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் பிறந்தவர். ஆன்மிக நம்பிக்கையும், ஒழுக்கமும், பண்பும் நிறைந்த குடும்ப பரம்பரையில் வழிவந்தவர். தற்பொழுது அரச நில அளவையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருப்பவர். ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனது வருடாந்த மகோற்சவ காலமாக இருந்தபொழுதிலும் திரு. சபாரத்தினம் தனது கடமையின் நிமித்தம் முக்கியமான களப் பணியில் லுனுகலையில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். இவரது மனைவி தொண்டைமானாறு கிராமத்தை சேர்ந்தவர். சந்நிதியானால் ஆட்கொள்ளப்பட்ட பூசகர் மருதர் கதிர்காமர் மரபுவழிவந்த முருகப் பெருமானது மெய்யடியவர்.

இப்பொழுது ஆவணி மாதம் முருகப்பெருமானுடைய உற்சவம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. திருமதி பாக்கிய ரத்தினம் சபாரத்தினம் உற்சவ காலத்தில் விரதம் இருந்து முழுமையான அகப்புற தூய்மையுடன் முருகப்பெருமானை மனமுருகி வழிபாடு செய்து கொண்டிருக்கிறார். ஆனாலும் கணவன், கடமை நிமித்தம் ஊரில் இல்லாமையால் ஆலயத்திற்கு தான் மட்டும் தனியாகச் சென்று உற்சவத்தில் நேரடியாகப் பங்குபற்ற அவரது மனம் இடம்தரவில்லை. கணவன் மனைவி என்ற உறவில் இது தமது முதல் உற்சவமாக இருக்கின்ற காரணத்தால் கணவனுடன்தான் உற்சவத்திற்கு செல்ல வேண்டுமென்பது அவரது பெருவிருப்பமாக இருந்தது. இவ்வா றான தனது உள்ளார்ந்த உணர்வுகளை தனது கணவனுக்கும் தெளிவாக அறியப்படுத்தவும் அவர் தவறவில்லை.

அதேநேரம் திரு. சபாரத்தினம் மிக முக்கியமான நில அளவைச் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அரச நில அளவைப் பணி என்பது கூட்டாக (Team work) மேற் கொள்ளுகின்ற ஒரு களப்பணி. இதனால் விடுமுறை எடுத்து வீட்டிற்கு வருவதென்பது இயலாத காரியமாகும். அத்துடன் போக்குவரத்து வசதிகள் கடினமானதாகவும் காலதாமதம் ஏற்படுத்தக் கூடியதுமான அடர்ந்த காட்டுப் பகுதியிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது அந்த களப்பணி இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இருந்தபோதும் மனைவியின் உருக்கமான வேண்டுதலை புரிந்து கொண்ட சபாரத்தினம் விடுமுறைக்கு விண்ணப்பிக்கின்றார். ஆனாலும் மேலதிகாரியகளால் அவரது விடுமுறை விண்ணப் பம் நிராகரிக்கப்படுகிறது.

மனைவியின் உணர்வுகளை திரு. சபாரத்தினம் முழுமை யாக உணர்ந்து கொண்ட நிலையிலும் சந்நிதியானது மகோற்சவத்தில் குடும்ப சமேதரராக பங்குபற்றி சந்நிதியானை தரிசிப்பதென்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகிவிடுகிறது. மேலும் உளமார விருப்பம் இருந்தும் மனைவியின் விருப்பத்தை பூர்த்தி செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையில் அவரும் வேதனையுடன் காணப்படுகின்றார். இவ்வாறான தனது உணர்வு களையும், தான் எதிர்நோக்கிக் கொண்டிருந்த சங்கடமான நிலமைகளையும் சபாரத்தினம் தனது மனைவிக்கு கடிதம் மூலம் தெளிவாகத் தெரியப்படுத்துவதைத் தவிர அவருக்கு அப்போதைக்கு வேறு வழி இருக்கவில்லை.

இவ்வாறு கணவன் மனைவி இருவரும் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் உண்மை நிலைகளை புரிந்துகொண்டவர் களாகக் காணப்பட்டனர். ஆனாலும் கணவன் இல்லாது முருகப் பெருமானது உற்சவத்திற்கு செல்வதற்கு திருமதி பாக்கிய ரத்தினத்தின் உள்ளம் இடம்தரவில்லை. இப்பொழுது முருகப் பெருமானது வருடாந்த மகோற்சவம் நிறைவடையும் நாட்களை அண்மித்துக் கொண்டிருந்தது. இந்தநிலையில் ஆகக் குறைந்தது தேர் உற்சவத்திற்கேனும் தான் தனது கணவருடன் சென்று முருகப் பெருமானை வழிபடவேண்டும் என்று அவரது உள்ளம் ஏங்கியது. எல்லோரையும் போல தானும் முருகப் பெருமான் தேர் ஏறி வருகின்ற அற்புதக் கோலத்தை கண்குளிரக் காண இறையருள் கைகூடாதா என்ற ஓர் ஆசையும் ஆதங்கமும் அவருக்குள் உருவாகிறது. அவரும் ஒரு சராசரி பெண் ஆகையால் அவருக்குள் இவ்வாறான ஓர் ஆதங்கம் ஏற்படுகிறது. அந்த விருப்பத்தையும் ஆதங்கத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனையாக்கி உள்ளம் உருகி தனது குல தெய்வமான சந்நிதி முருகனிடம் வேண்டுதல் செய்கின்றார்.

திருமதி பாக்கியரத்தினத்திற்கு நாளை இடம்பெறப் போகின்ற தேர் உற்சவத்திற்கு தன்னால் செல்ல முடியாதென்பதும் இப்பொழுது உறுதியாகிவிட்டது. உள்ளம் சோர்வடைகின்றது. தாளாத துன்பம் அவரைப் பற்றிக் கொள்கிறது. அதுமட்டுமல்ல ஒருவித ஏமாற்றம் தவிப்பு என்பன எல்லாம் அவருக்கு ஏற்படுகின்றன. இவ்வாறான ஆழமான கவலைகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகின்றார்.

இருந்தாலும் ஆழமான ஆன்மிக நம்பிக்கையுள்ளவராக அவர் வளர்ந்துவந்தவர். இதனால் அந்த ஆன்மிகம் என்ற பக்க துணையுடன் தனது துன்பங்களை ஜீரணிக்க முயற்சிக்கின்றார். மேலும் மானிடப் பிறப்பு எடுத்துவிட்ட எமக்கு இதுபோன்ற துன்பங்கள் கவலைகள் ஏமாற்றங்கள் எல்லாம் தவிர்க்க முடியாதவை என்பதையும் அவர் நன்றாக உணர்ந்திருந்தார். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சராசரி மனிதர்கள் ஆண்டவனிடம் மட்டுமே வேண்டுதல் செய்யமுடியும். திருமதி பாக்கியரத்தினமும் அதனையே மேற்கொண்டார். சந்நிதியானை மனமுருகி வழிபட்டார். உனது திருவுள்ளம் எதுவோ, அதுவே நடக்கட்டும் என அவரிடம் தன்னை ஒப்படைத்தார். இவ்வாறு தனது குலதெய்வமான சந்நிதியானின் திருப்பாதங்களை சிக்கனப் பற்றியவாறு நித்திரைக்கு சென்றுவிடுகின்றார்.

கணவன் மனைவி உறவு எவ்வளவு புனிதமானதோ அதே போல தாய் மகள் உறவும் மிக இறுக்கமானது. பாக்கியரத்தினத்தின் தாயார் தங்கரத்தினமும் தனது மகளின் பரிதாப நிலை கண்டு உள்ளத்தால் துடித்துக்கொண்டிருந்தார். தனது மகள் உற்சவம் ஆரம்பமாகி தற்பொழுது பதின்மூன்று தினங்கள் ஆகின்ற நிலையிலும் உற்சவத்திற்குச் செல்லாதிருப்பது அவருக்கு தாங்கமுடியாத வேதனையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. தனது மருமகன் சபாரத்தினம் எப்படியாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேண்டும். தனது மகளும் மருமகனும் சேர்ந்து தேர் உற்சவத் திற்கேனும் சென்று வழிபட வேண்டுமென சந்நிதியானிடம் மன்றாடுகின்றார். மருதர் கதிர்காமர் வழிவந்து சந்நிதியானுக்கு நாளும் பொழுதும் தொண்டுகள் செய்து வருவதையே தமது வாழ்வின் கடமை என வாழ்ந்து வருகின்ற குடும்பப் பின்னணி உள்ளவர்கள் இந்தக் குடும்பம். இந்தப் பிறப்பே சந்நிதியானுக்கு தொண்டுகள் செய்வதற்கானது என்ற உணர்வு உள்ளவர்கள். இவ்வாறான பின்னணியுள்ள தாய் தங்கரத்தினம் மகளின் பரிதாப நிலை கண்டு தாளாத துன்பத்துக்கு உள்ளாகின்றார். சந்நிதியானை மனதில் நிறுத்தியவாறு தாளாத துன்பத்துடன் நித்திரைக்குச் செல்கின்றார்.

அசையாத ஆன்மிக நம்பிக்கையுடன் இவ்வுலகில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கு இதுபோன்ற தருணங்கள் மிகவும் சோதனையான தருணங்களாகும். அதேநேரம் ஆண்டவன் தனது மெய்யடியவர்களை சோதிப்பதென்பதும் இது போன்ற தருணங்கள் தான்.

தற்பொழுது நடுச்சாமத்தைக் கடந்து நேரம் அதிகாலை 4.00 மணியையும் தாண்டிவிட்டது. அப்பொழுது தாய் தங்கரத்தினத்திற்கு தெளிவான அசரீரி ஒன்று கேட்கின்றது. **உனது மருமகன் வருவார்** என்ற அசரீரி கேட்கிறது. அசரீரியில் வெளிப்பட்டதுபோல தனது மருமகன் வரமாட்டாரா என்ற ஏக்கமும் ஆதங்கமும் மருதர் கதிர்காமர் வழிவந்த அந்த தாயாருக்கு ஏற்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில்தான் அந்த அற்புதம் அங்கே இடம்பெறுகின்றது.

அவர் அவ்வாறு ஆதங்கப்படும்பொழுது கதவும் தட்டப்படு கிறது. கதவு தட்டப்படுவதை ஒரு பிரமையோ என நினைக் கின்றார். ஆனாலும் தட்டப்படும் கதவை திறக்கின்றார். என்ன ஆச்சரியம் அங்கே மகளது கணவர் சபாரத்தினம் வெளியே காணப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரை போல் இருந்தாலும் கணவர் வரமாட்டாரா என்ற ஏக்கத்துடன் விழிப்பு நிலையிலிருந்த மகள் பாக்கியரத்தினத் திற்கும் தனது கணவன் சபாரத்தினத்தின் குரல் கேட்கின்றது. துடிதுடித்து எழுந்த பாக்கியரத்தினத்திற்கு அவருடைய கண் களை அவராலேயே நம்பமுடியாதிருக்கிறது. ஆனந்தத்தால், ஆச்சரியத்தால், அடக்கமுடியாத பேரின்பத்தால் பாக்கிய ரத்தினம் அவர்கள் திக்குமுக்காடிப் போகின்றார். அவர் இதுவரை நாட்களும் அனுபவித்துக் கொண்டிருந்த துன்பம், வேதனை, தவிப்பு எல்லாம் அந்த ஒரு நொடிப்பொழுதிலேயே அவரைவிட்டு சென்றுவிட்ட உணர்வு அவருக்குள் உருவாகிறது.

அங்கே அவருடன் சேர்ந்து சந்நிதியானது தேர் உற்சவத் திற்கு செல்வதற்காக அவரது கணவர் அவர் முன்னால் காட்சி தருகின்றார். தனது குலதெய்வமான சந்நிதி முருகன் கணவனது உள்ளத்தில் குடிகொண்டு கணவனது உருவத்தில் தன் கண் முன்னே காட்சிதந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு திருமதி பாக்கியரத்தினத்திற்கு ஏற்படுகிறது.

திருமதி பாக்கியரத்தினத்தின் உள்ளத்தில் ஓடிக்கொண் டிருக்கும் உணர்வை அவரது கணவரும் உறுதிப்படுத்துகின்றார். சந்நிதிமுருகன் தனது கண்களுக்கு நேருக்கு நேராக வெளிப் பட்ட அற்புதத்தை ஆனந்தக் கண்ணீர் மல்க தனது மனைவிக்கு எடுத்துரைக்கின்றார். நான் வரவில்லை சந்நிதி முருகன் வெளிப் பட்டு சந்நிதிமுருகன்தான் என்னை இங்கே அழைத்து வந்தார் என்ற உண்மையையும் பக்தி கலந்த உணர்வுடன் தனது மனைவிக்கு சபாரத்தினம் எடுத்துக் கூறுகின்றார்.

திரு. சண்முகம் சபாரத்தினம் காட்டின் மத்தியில் கள வேலை முடித்தபின் இரவு வழமைபோல களைப்புடன் தனது கூடாரத்திற்குள் தூங்கிக் கொண்டிருக்கிறார். அப்பொழுது ஒரு ஒளி அவரது கண்களுக்குள் ஊடறுத்துச் செல்கின்றது. பதட்டத் துடன் கண் விழித்துக் கொள்கின்றார். கண் விழிக்கும் பொழுது அங்கே அந்த அதிசயம் நேருக்குநேர் நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் வள்ளி தெய்வானை சகிதம் முருகப் பெருமானுடைய பேரருள் நிறைந்த அந்தக் காட்சி அவருக்கு தெளிவாக வெளிப் படுகின்றது.

உடல் மெய்சிலிர்க்க சபாரத்தினம் படுக்கையிலிருந்து எழும்புகின்றார். என்ன ஆச்சரியம்! நொடிப்பொழுதிற்கு முன்பு ஊனக் கண்களுக்கு வெளிப்பட்ட அந்தப் பேரருள் நிறைந்த காட்சி மறைந்து விடுகின்றது. அப்பொழுதிருந்து அவர் சந்நிதியானது திருப்பாதங்களுக்கு அடிமையாகின்றார். அத்துடன் சந்நிதியானது பெரும் கருணையையும் உணர்ந்து கொள்கின்றார்.

மேகத்தில் பறப்பது போன்ற ஆனந்த வெள்ளத்துடன் நித்திரைக்குச் சென்றவருக்கு மீண்டும் அங்கே அற்புதம் இடம்பெறுகின்றது. நித்திரையின் நடுவிலே வேல் வடிவில் ஒரு மின்னல் ஒளி ஓரிடத்திலிருந்து புறப்பட்டு இன்னொரு இடத்திற்கு சென்று சேருகின்ற ஒரு காட்சி தெளிவாகத் தெரிகிறது. அந்த காட்சியின் நிறைவில் தானும் தனது துணைவியாரும் தேருக்கு அருகாமையில் நின்று மகிழ்வுடன் வழிபட்டுக் கொண்டிருப்பதும் கனவாக, ஆனால் தெளிவாக அவருக்கு இந்த காட்சி தென்படு கிறது. துடிதுடித்து எழுகின்றார். வேல் வடிவில் செல்கின்ற ஒளியை மீட்டுப் பார்க்கின்றார். தன்னை உற்சவத்திற்கு பயணம் போகச் செய்வதற்கு சந்நிதியான் எனக்கு வெளிப்படுத்துகின்ற செய்திதான் என்பதை சபாரத்தினம் முழுமையாக விளங்கிக் கொள்கின்றார்.

விடிந்த பின் முறைப்படி சுகவீன லீவிற்கு விண்ணப்பித்து விட்டு வீட்டிற்கு தனது பயணத்தைத் தொடர்ந்துள்ளார். இந்த மெய்சிலிர்க்கும் சம்பவங்கள் நடைபெற்று இன்று பல தசாப்தங் கள் ஆகிவிட்டன. சம்பந்தப்பட்டவர்களும் அமரர்களாகி விட்டனர். ஆனால் இந்த தம்பதியினரின் பிள்ளைகள் இந்த நிகழ்வுகள் தமக்கு நடந்தவை போலவே அந்த உயிரோட்டமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புத நிகழ்வை உள்வாங்கி அந்த அற்புத உணர்வுகளுடனேயே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்தக் கட்டுரையை அடியேன் எழுதும்பொழுது வல்வை நகர பிதாவாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் செல்வேந்திரா, கனடாவிலும் பிரித்தானியாவிலும் வைத்தியர்களாக தொழில் புரியும் மகேந்திரா, தெய்வேந்திரா மற்றும் இரு பெண்பிள்ளை களுமாக ஐந்து பிள்ளைகளும் தமது பெற்றோரைப் போலவே அன்பும் பண்பும் நிறைந்த அதே நேரம் ஆன்மிக ஈடுபாடும் உள்ளவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

சராசரி மானிடர்களுக்கு மிகமிக அரிதாக இடம்பெறுகின்ற இவ்வாறான நேரடியான திருவிளையாடல்களை நாங்கள் அறிவதற்கு கிடைத்த சந்தர்ப்பம் கூட எம் எல்லோருக்கும் கிடைத்த பாக்கியமே.

ஓம் முருகா!

## நாய்க்கும் கடமை

தினமும் நீராடி உடலாலும் உள்ளத்தாலும் தன்னை தூய்மைப் படுத்திக் கொண்டுதான் மணி அடிக்கும் அம்மையார் தனது தொண்டினை தொடங்குவார். அன்று சற்று நேரமாகிவிட்டது. ஆயத்த மணியும் மூலஸ்தானத்தில் ஒலித்துவிட்டது. மேற்குத் திசையில் ஆலயத்துடன் இணைந்திருக்கும் அந்த தீர்த்தக் கேணியில் மணி அடிக்கும் இந்த அம்மையார் அவசரமாக நீராடிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவரைவிட அவசரமாக அங்கே வந்த அந்த நாய் அவரைப் பார்த்து குலைத்து குலைத்து அவரது காலையும் நக்கியபடி குறிப்பிட்ட சைகை காட்டிக் கொண்டே இருக்கிறது. ஓடிச் சென்று சந்நிதியானது ஆலய மணியை அடி என்பதுதான் அந்த சைகை. அந்த சைகையை இதற்கு முன்பும் நன்கு உணர்ந்தவர் அந்த அம்மையார். சந்நிதியானுக்கு மட்டுமல்ல அந்த நாய்களுக்கும் அவர் பதில் கூறவேண்டியுள்ளது. இதுதான் சந்நிதி ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம் - 11

பாத யாத்திரிகைகள் சமய ரீதியாக மட்டுமன்றி சமுக ரீதியாகவும் மக்களைப் பக்குவப்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகும். அடியேனுக்கு ஏழு, எட்டு வயது இருக்கும் பருவத்தில் கதிர்காமத்திற்கு கால்நடையாக பாதயாத்திரை சென்றுவந்த ஒரு அம்மையாரின் அனுபவங்களை உள்வாங்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் தனது அனுபவங்களை எனது தாயாருக்கு கூறும்பொழுது அருகில் இருந்து ஆர்வத்துடன் அவற்றை உள்வாங்கியது பசுமரத்தாணி போல ஆழமாக மனதில் பதிந்துள்ளது. அதனை அடியேன் இன்றுவரை மீட்டுப் பார்ப்பதுண்டு. பாத யாத்திரை ஒரு சிறந்த வாழ்வியல் அனுபவம் என்பதை அவ்வாறான யாத்திரிகைகளில் ஈடுபடுபவர்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழ்கின்ற தமிழ்மக்கள் கதிர்காமத்திற்கு பாத யாத்திரை சென்றுவருவதென்பது எல்லா வகையிலும் பயன் தரத்தக்க ஒரு செயற்பாடாகும். அதிலும் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனை வழிபடுகின்ற அடியவர்கள் கதிர்காம யாத்திரை மேற்கொள்வதென்பது உச்சமான பயன் தரக்கூடிய ஒரு விடயமாகும்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் கதிர்காமக் கந்தன் ஆலயம் ஆகிய இரண்டும் புவியியல் ரீதியாக மிக நீண்ட தூரத்தில் அமைந்திருக்கின்றன. அதேவேளையில் இரண்டு ஆலயங்களிலும் பூசையை மேற்கொள்பவர்கள் மொழியாலும் இனத்தாலும் வேறுபட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறான வேறுபட்ட சூழ்நிலையிலும்கூட கதிர்காமக்கந்தன் ஆலயத்தில் இடம்பெறுவதைப் போன்றே பூசைமுறைகளும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை பற்றி ஆழமாக சிந்திக்கும்பொழுது மருதர் கதிர்காமரை சந்நிதியான் ஆட்கொண்டு கதிர்காமத்திற்கு அழைத்துச்சென்று அங்கே இடம்பெறுகின்ற பூசைமுறைகளைக் காண்பித்த வரலாறும் அந்த அற்புத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வும் எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்ற விடயங்களாக அமைந்திருப்பதை உணரமுடிகிறது.

பூசகர்கள் வாய்கட்டி பூசையினை நடாத்துகின்ற பூசைச் செயற்பாடுகள் தொடக்கம் தீர்த்தத் திருவிழாவின் பொழுது தீர்த்தமாடிய பின்பு முருகப்பெருமான் வள்ளி அம்மன் ஆலயத் திற்குச் சென்று நாள் முழுவதும் அங்கேயே தங்கியிருக்கின்ற சடங்குகளைக் கடைப்பித்தல் வரை அனைத்துச் செயற்பாடு களிலும் நெருக்கமானதும் ஆழமானதுமான ஒற்றுமைகள் இரண்டு ஆலயங்களிலும் இடம்பெற்றுக் கொண்டிருப்பதை கதிர்காம யாத்திரையின்பொழுது அங்கே எம்மால் நன்கு உணரக் கூடியதாகவிருந்தது.

ஆனாலும் கதிர்காமத்தில் மூலஸ்தானம் திரைச்சீலை யால் மறைக்கப்பட்டிருப்பதால் மூலஸ்தானத்தை அடியார்கள் காணமுடியாத குறையை போக்குவதற்காகப் போலும் கலியுகக் கந்தன் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் மூலஸ்தானத்தில் வேல் வடிவில் காட்சிகொடுத்துக் கொண்டிருப்பது அடியார்களாகிய நாம் செய்த பாக்கியமே. மேலும் கதிர்காமக்கந்தனைப் போலவே சந்நிதியானும் இங்கே அளவில்லாத அற்புதங்களை அடியவர் களுக்கு நிகழ்த்திக் கொண்டிருக்கின்றான். மேலும் இத்தகைய சிறப்புக்களும் தொடர்புகளும் இந்த இரண்டு ஆலயங்களிலும் இருப்பதனால்தான் வடபகுதி யாத்திரிகர்கள் கதிர்காமத்திற் கான தல யாத்திரையை ஸ்ரீ செல்வச்சந்நிதியிலிருந்து ஆரம்பிப் பதை தமக்குக் கிடைத்த ஒரு பேறாகக் கருதி அன்று தொடக்கம் அதனைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

சந்நிதியான் ஆச்சிரமம் 1988ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக் கப்பட்டது. காலப்போக்கில் ஆச்சிரமம் நிறுவன ரீதியாக சற்று வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து அவர்களும் இவ்வாறான பாத யாத்திரையினை வருடாவருடம் மேற்கொண்டு வருகின்றனர். அடியேனது தொழில் கடமை காரணமாக இவற்றில் அதிகம் பங்குபற்றுவதில்லை. 2006ஆம் ஆண்டு சற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வான ஒரு சூழ்நிலை வாய்த்ததால் அடியேனும் அந்த கதிர்காம யாத்திரையில் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. அது அடியேனுக்கும் ஏராளம் அனுபவங்களைப் பெற்றுத் தந்தது. அது தொடர்பான தொடர் கட்டுரைகளை 2007ஆம் ஆண்டு ஞானச்சுடர் சஞ்சிகையில் அடியேன் ஏற்கனவே எழுதி யுள்ளேன்.

2006ஆம் ஆண்டு கதிர்காமத்தில் உற்சவம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து எமது யாத்திரை ஆரம்பமாகியது. ஆலயத்தில் தங்கியிருப்பவர் கள் உட்பட ஏறத்தாழ 40 அடியவர்களுடன் வாகனத்தில் எமது யாத்திரை ஆரம்பமாகியது. எமது யாத்திரை 07.08.2006 ஆரம்பமாகி 10.08.2006 இல் நிறைவுபெற்றது. அந்த பாத யாத்திரையின் நிறைவுத் தருணத்தில் எமது பாத யாத்திரைக் குழுவினருக்கு இடம்பெற்ற சந்நிதியானது பெருங்கருணை நிறைந்த அந்த நிகழ்வினை இங்கே சுருக்கமாக அடியார் களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

A9 வீதி 2006ஆம் ஆண்டு திடீரெனத்தான் மூடப்பட்டது. இதனால் குடாநாட்டிற்குள் பிரவேசிக்கமுடியாது தடைப்பட்ட பயணிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப எந்த மார்க்கமுமில்லாது பல வாரங்கள் தவிக்கும் நிலை ஏற்பட்டது. அதேபோல பொருட்களுடன் வந்த பார ஊர்திகள் கடைசிவரை குடாநாட்டிற்குள் வரமுடியாத பரிதாப நிலைக்கும் தள்ளப்பட்டன. இவ்வாறான இக்கட்டான ஒரு சூழ்நிலையில்தான் எமது கதிர்காம யாத்திரையின் இறுதித் தருணங்களும் அமைந் திருந்தது.

A9 வீதியால் இறுதியாக பிரயாணம் செய்து யாழ் குடா நாட்டிற்குள் பிரவேசித்த பயணிகள் வாகனங்களில் நாங்கள் பயணம் செய்த வாகனமும் ஒன்றாக அமைந்திருந்தது. ஆம் முதல்நாள் மாலைப்பொழுதில் நாம் A9 வீதியைக் கடந்து குடாநாட்டுக்குள் பிரவேசிக்கின்றோம். மறுநாள் A9 வீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடப்படுகின்றது. எமது கதிர்காம யாத்திரையில் அதிகமானவர்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமே தஞ்சமென ஆலயத்தில் தங்கியிருந்தவர்களே இடம்பெற்றிருந்தனர். இவ்வாறு திக்கற்றவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கதிர்காம யாத்திரைக்கும், திக்கற்ற தனது அடியவர்களுக்கும் துன்பங்களும் துயரங்களும் ஏற்பட சந்நிதியான் அனுமதிப்பானா? இவ்வாறு எந்த இக்கட்டான சூழலுக்குள்ளும் அகப்படாது எமது கதிர்காமப் பயணம் நிறைவாக நிறைவேறியது.

2022 பங்குனி மாதம் மலைநாட்டுப் பகுதியல் நலிவுற்ற மக்களுக்கு சமுகப் பணி செய்வதற்காக ஆச்சிரமம் ஒரு பயணத்தை மேற்கொண்டது. அந்த பயணத்தின் நீட்சியாக கதிர்காம தரிசனமும் உள்ளடங்கியிருந்தது. இதனால் வழமை போல சந்நிதியான் அற்புதங்கள் நூலினை வெளியீடு செய்வதற்கு கனடாவிலிருந்து வருகை தந்திருந்த அடியேனும் அதில் விருப்பத்துடன் பங்குகொள்ள முடிந்தது. மீண்டும் ஒரு முறை கதிர்காமக் கந்தனையும் தரிசிக்கவும் முடிந்தது.

ஒட்டுமொத்த மக்களுக்கும் பொதுவான கடவுளாக கதிர்காமக் கந்தன் இருப்பதும் இன, மத வேறுபாடுகளை மறந்து எல்லோரும் ஒரு நாட்டு மக்களாக கதிர்காமத்தில் ஒன்று கூடுவதும் எல்லோருக்கும் நிறைவைத் தரும் விடயமாகும்.

தெய்வங்கள் இவ்வாறான சூழல்களை மனிதர்களுக்கு ஏற்படுத்தும் பொழுது மனிதர்களாகிய நாமும் அவற்றைப் பயன்படுத்தினால் நாடும் நல்லாக இருக்கும், நாட்டு மக்களும் நிறைவாக வாழ்வார்கள். எல்லா இனங்களிலும் உள்ள அப்பாவி மக்களது உணர்வுகள் இதுவாகவே உள்ளது.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வருடாந்த மஹோற்சவம் – 2022



தமிழ்ப்பூங்கா -நெல்லியடி - 021 226 4014
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org